அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு நாணயமாற்று நிறுவனம்
சாரங்கா நகை மாடம்
MONEY EXCHANGE
ALL COUNTRIES
WESTERN UNION WU
moving money for better
021 221 7007
இல.157/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: 16
விலை:20 ரூபா
காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆனி 30 சனிக்கிழமை 14.07.2018 | கதிர் 250

# வடக்கு கிழக்கில் இந்திய முதலீட்டை வலியுறுத்திக் கோருகிறார் சம்பந்தன்

## பாரத வெளிவிவகாரச் செயலரை நேற்றுக் கொழும்பில் சந்தித்த போது

**கொழும்பு, ஜூலை 14**

**தமிழர் தாயகமான வடக்கிலும், கிழக்கிலும் இந்திய முதலீடுகளை பெருமளவில் ஊக்குவிப்பதன் மூலம் எமது மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதுடன் நமது இளைஞர்களுக்கு போதிய வேலைவாய்ப்புக்களையும் உருவாக்கிக் கொடுக்க முடியும்.**

**- இவ்வாறு நேற்று இந்திய வெளிவிவகார செயலாளர் விஜய் கோகுலை கொழும்பில் சந்தித்து வலியுறுத்தினார் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.**

பக்கம் 14 »



## தீர்வு கிட்டாமையைப் பற்றி சம்பந்தன் தாய்லாந்துப் பிரதமருக்கு விவரித்தார்



கொழும்பு, ஜூலை 14

இலங்கை வந்துள்ள தாய்லாந்தது பிரதமர் நேற்று கொழும்பில் எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இரு நாட்டிற்குமிடையில் உள்ள நீண்டகால உறவை எடுத்துக்காட்டிய இராசம்பந்தன் கடந்த காலங்களில் தாய்லாந்து அடைந்துள்ள முன்னேற்றங்களுக்காகத் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்தார்.

பக்கம் 03 »

## குற்றங்கள் புரிவோருக்கும் பொலிஸாருக்கும் தொடர்பு

### அமைச்சர், பொலிஸ்மா அதிபரிடம் எடுத்துரைத்தார் வடக்கு முதல்வர்

யாழ்ப்பாணம், ஜூலை 14

வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் கடத்தல், பெண்கள் மீதான துன்புறுத்தல் உள்ளிட்ட குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது எனச் சட்டம், ஒழுங்கு அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபரிடம் முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் எடுத்துரைத்தார்.

பக்கம் 03 »

## சபாநாயகர் திடீர் சுகவீனம்

சபாநாயகர் கரு ஜயசூரிய திடீரென ஏற்பட்ட சுகவீனத்தை அடுத்து,நேற்றுக் காலை கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்

பக்கம் 03 »



## வடபகுதித் தமிழ் இளைஞர் லண்டனில் கொலையுண்டார்

லண்டனின் விம்பிள்டன் பகுதியில் கடந்த செவ்வாய்கிழமை இடம்பெற்ற உதைப்பந்தாட்ட போட்டியைப் பார்வையிட சென்ற இலங்கையின் வடபகுதித்தமிழ்இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பக்கம் 03 »

## பதினாறு இந்திய மீனவர்களுக்கு 2 ஆண்டுகள் ஒத்திவைப்புச் சிறை

### ஊர்காவற்றுறை நீதிவான் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் மற்றும் இலங்கையில் தடைசெய்யப்பட்ட இழுவை மடி மீன்பிடி முறைமையில் தொழிலில்

பக்கம் 14 »

## சிறப்பு 'ட்ரயல் - அட் பார்' மன்று அடுத்த வாரம் முதல் செயற்படும்

பெரும் நிதி மோசடி மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு அமைக்கப்பட்ட முதலாவது - மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகள் கொண்ட - சிறப்பு மேல் நீதிமன்றம் (ட்ரயல் - அட் பார்) அடுத்த வாரம் தனது அமர்வை

பக்கம் 03 »

### இனிது ரகசியம் அல்ல!

கொழும்புஇராஜதந்திர வட்டாரங்கள் வடக்கை எவ்வளவு உன்னிப்பாக நோக்குகின்றன என்பதை அவதானிக்கும் போது ஆச்சரியமாக இருக்கிறது.

நேற்று மேற்குலக இராஜந்திர வட்டாரங்களுடன் மிக நெருக்கமாகப் பழகும் ஒருவருடன் உரையாடினேன். அவர் கூறிய தகவல்கள்

பக்கம் 03 »

## லலித், குகனின் ஆள்கொணர்வு மனு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

காணாமல் ஆக்கப்பட்டவர்களான லலித் மற்றும் குகன் ஆகியோரின் ஆள்கொணர்வு மனு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் விசா

பக்கம் 14 »

## அமைச்சு விடயங்களை கையளிக்காவிடின் நீதிமன்ற அவமதிப்புக்கு முறையிடுவேன்!

### விக்கி, அனந்தி, சிவநேசனுக்கு டெனீஸ் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 14

மேன்முறையீட்டு நீதிமன்றம் விடுத்த உத்தரவுப்படி எனது அமைச்சுக்களை மீண்டும் என்னிடம் ஒப்படைப்பதற்கு தொடர்ந்து மறுத்துவருவீர்களாயின் அது குறித்து நீதிமன்ற அவமதிப்புக்காக நீதிமன்றத்திடம் முறையிடுவேன்.

இந்த சாரப்பட எச்சரிக்கைக் கடிதம் ஒன்றை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் மற்றும் அனந்தி சசிதரன், கே.சிவநேசன் ஆகியோருக்கு நேற்று அனுப்பி வைத்திருக்கின்றார் ப.டெனீஸ்வரன்.

பக்கம் 14 »

## குற்றங்களைத் தடுக்காமல் இங்கு என்ன செய்கிறீர்கள்?

### தமிழ்ப் பொலிஸ் அதிகாரியை போட்டுத் தாக்கினார் பூஜித



யாழ்ப்பாணம், ஜூலை 14

"தமிழ்ப் பிரதிநிதிகளுடன் ஒன்றிணைந்து - அவர்களுடன் ஆலோசித்து - நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என்றுதான் தமிழ்ப் பொலிஸ் அதிகாரியான உங்களை இங்கு சிறப்பு

பக்கம் 14 »


## ரூ.ஆறரைக் கோடி பெறுமதியான ஹெரோயின் சம்பூர் பகுதியில் மீட்பு



திருகோணமலை மாவட்டம், சம்பூர், இலக்கந்தை கடற்கரைப் பகுதியில் நிலத்தில் பல்வேறு இடங்களில் புதைத்து வைக்கப்பட்டிருந்த

பக்கம் 14 »

# இலங்கை, தாய்லாந்துக்கிடையில் 4 புதிய உடன்படிக்கைகள் கைச்சாத்து





இலங்கைக்கும் தாய்லாந்திற்கும் இடையிலான வர்த்தக மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களை மேலும் பலப்படுத்த இருநாட்டு அரச தலைவர்களும் கவனம் செலுத்தியுள்ளனர்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் இலங்கை வந்தடைந்த தாய்லாந்து பிரதமர் பிரயுத் சான் ஓஷா மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின்போதே மேற்படி இந்த விடயம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2016 ஆம் ஆண்டில் தாய்லாந்திற்கு மேற்கொண்ட விஜயத்தின்போது விடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ அழைப்பின் பேரிலேயே தாய்லாந்து பிரதமரின் இலங்கை விஜயம் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி செயலகத்திற்கு வருகை தந்த தாய்லாந்து பிரதமரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வரவேற்றதுடன், இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் மரியாதை வேட்டுக்கள் முழங்க மகத்தான வரவேற்பும் வழங்கப்பட்டது.

இரு நாட்டு தலைவர்களுக்கும் இடையிலான சிநேகபூர்வ உரையாடலின் பின்னர் இருதரப்பு கலந்துரையாடல்கள் ஆரம்பமாகின.

இலங்கைக்கும் தாய்லாந்திற்கும் இடையிலான நான்கு புதிய புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் இதன்போது அரச தலைவர்களின் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டன. சட்டவிரோதமான ஆள்கடத்தலுக்கு எதிரான சட்ட ஏற்பாடுகளுடன் தொடர்புடைய புரிந்துணர்வு உடன்படிக்கை முதலாவதாகக் கைச்சாத்திடப்பட்டதுடன், அமைச்சர் தலதா அத்துகோரள மற்றும் தாய்லாந்தின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஆகியோர் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இருநாடுகளுக்கும் இடையிலான உபாயமார்க்க பொருளாதார கூட்டுமுயற்சி தொடர்பான உடன்படிக்கையில் அமைச்சர் மலிக் சமரவிக்ரம மற்றும் தாய்லாந்தின் பிரதி வர்த்தக அமைச்சர் ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

தாய்லாந்து அரசரால் பிரபல்யப்படுத்தப்படும் அளவீட்டு பொருளாதார கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த பேண்தகு சமூக அபிவிருத்தி மாதிரி தொடர்பான ஒன்றிணைந்த செயற் திட்டம் பற்றிய உடன்படிக்கையும் இதன்போது கைச்சாத்திடப்பட்டது.

அதேபோன்று ஆரம்பக் கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதிசேர் நடவடிக்கையுடன் தொடர்புடைய தொழில்நுட்பம் பற்றிய உடன்படிக்கை தாய்லாந்தின் Kasetsart பல்கலைக்கழகத்திற்கும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

(கு)

## வலம்புரிச் சங்குடன் இருவர் கைது



கிளிநொச்சி – தர்மபுரம் பொலிஸ்பிரிவில் வைத்து சுமார் 90 லட்சம் ரூபா பெறுமதியான வலம்புரிச் சங்குடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என கிளிநொச்சி விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

தமக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தப் பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் செய்தபொழுது இரு வலம்புரிச் சங்குடன் இரு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர் என தெரிவித்துள்ளனர்.

வலம்புரிசங்கை கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலிருந்து கொழும்பில் உள்ள வர்த்தகர் ஒருவருக்கு விற்பனை செய்வதற்கு வைத்திருந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் அறியமுடிகிறது என விசேட அதிரடிப்படையினர் தெரிவிக்கின்றனர்

இவர்கள் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளனர் என விசேட அதிரடிப் படையினர் தெரிவிக்கின்றனர்

## தலைவர் அமிர்தலிங்கத்தின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

தமிழர் விடுதலைக்கூட்டணியின் முன்னாள் தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித்தலைவருமான அ. அமிர்தலிங்கத்தின் 29 ஆவது நினைவு தினம் நேற்று வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் வீரமக்கள் தினத்தின் முதல் நாள் நிகழ்வாக இந்த நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது. அமிரின் 29 நினைவு தினமும் 29 ஆவது ஆண்டு வீரமக்கள் தினமும் ஒரு வாரகாலத்திற்கு உமாமகேஸ்வரன் சமாதியில் அனுஷ்டிக்கப்படவுள்ளதுடன் எதிர்வரும் 16 ஆம் திகதி உமாமகேஸ்வரனின் நினைவு தினமும் வீரமக்கள் தினமும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் நேற்றைய நிகழ்கள் வவுனியா நகரசபையின் உறுப்பினர் சந்திரகுலசிங்கம் தலைமையில் இடம்பெற்றதுடன், தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் கொடி அரைக்கம்பத்தில் பறக்கிவிடப்பட்டதுடன் அமிர்தலிங்கத்தின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை மற்றும் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது வட மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், வவுனியா நகரசபை உறுப்பினாகளான நா. சேனாதிராஜா, சி. காண்டீபன் வவுனியா தமிழ் தெற்கு பிரதேசசபை மற்றும் செட்டிகுளம் பிரதேசசபைகளின் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் சார்பான உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (கு - 100)

## மரணதண்டனைக்கு பௌத்த பீடங்கள் கத்தோலிக்க சபை ஆதரவு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 14

மரணதண்டனை விதிக்கப்பட்ட போதைப்பொருள் குற்றவாளிகளை தூக்கிலிடும் நடைமுறையை மீண்டும் கொண்டு வர, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்துள்ள முடிவுக்குகத்தோலிக்கத்திருச்சபை ஆதரவு தெரிவித்துள்ளது.

கத்தோலிக்கத் திருச்சபையின் கர்தினால் மல்கம் ரஞ்சித், கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில், ஜனாதிபதியின் முடிவுக்கு வரவேற்புத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிறைகளில் இருந்தவாறு குற்றங்களை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளை தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

சிறைச்சாலைகளில் இருந்து கொண்டு, போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்களை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளுக்கு சிறைச்சாலை அதிகாரிகள் சிலரும் ஒத்துழைப்பு அளிக்கின்றனர் என்றும், கர்தினால் மல்கம் ரஞ்சித் குற்றம்சாட்டியுள்ளார்.

இதற்கிடையே, போதைப் பொருள் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிப்பதற்கு பௌத்த பீடங்களும் ஆதரவு தெரிவித்துள்ளன.

## எதிர்கால அபிவிருத்தியின் கேந்திர நிலையமாக மன்னார்

### அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 14

சீரான தேசிய பௌதீக அபிவிருத்தித் திட்டம் அமுலாக்கப்படுகிறது. இதன்கீழ் கொழும்பிலிருந்து திருகோணமலை வரையிலும், காலியிலிருந்து அம்பாந்தோட்டை வரையிலும், வாழைச்சேனையில் இருந்து மட்டக்களப்பு வரையான ஐந்து கடற்கரைகள் அபிவிருத்தி செய்யப்படும்.

மேலும், எதிர்கால அபிவிருத்தியின் கேந்திர நிலையமாக மன்னார் மாறும் என்றும் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்..

அரச தகவல் திணைக்களமும், சிவில் சங்கங்களின் கூட்டமைப்பும் இணைந்து கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த கருத்தாடல் நிகழ்வில் கலந்துகொண்டு அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையின் பூகோள அமைவிடத்தின் அடிப்படையில் அமெரிக்காவும் சீனாவும் வணிக யுத்தத்தில் ஈடுபட்டுள்ளன. இந்த யுத்தத்தின் அனுகூலங்களை இலங்கை பெற்றுக் கொள்வது அவசியம்.

கொழும்பு நகர சேரிக் குடியிருப்புக்கள் பற்றியும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார். இத்தகைய குடியிருப்புகளில் வாழும் 50 ஆயிரம் குடும்பங்களில் 25 ஆயிரம் குடும்பங்களுக்கு அடுத்த ஆண்டு புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும். கொழும்பு நகரில் நீர்விநியோக, மலசல வலைப்பின்னல்கள் நவீனமயப்படுத்தப்படும். குப்பை கூழப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படவுள்ளதென அவர் குறிப்பிட்டார்.

இதன்போது மொரட்டுவை பல்கலைக்கழக பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் அமல் குமாரகே உரையாற்றுகையில் –

கொழும்பு நகரின் நிலப்பரப்பில் ஆறில் ஒரு பாகம் வீதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அன்று கொழும்பு வீதிகளை பொது போக்குவரத்தில் ஈடுபடும் 90 சதவீதமான வாகனங்கள் பயன்படுத்தின. இன்று 47 சதவீதமான தனியார் வாகனங்களே வீதிகளைப் பயன்படுத்தி வருகின்றன என்றும் பேராசிரியர் குமாரகே குறிப்பிட்டுள்ளார்.

(கு)

## வவு. வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழு கூட்டம்; மாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன் வெளிநடப்பு!

வவுனியா வடக்கு பிரதேச செயலாளரின் செயற்பாட்டில் அதிருப்தி அடைந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இருந்து இடைநடுவில் வெளியேறியுள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலக ஒருங் கிணைப்பு குழு கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன் தலைமையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இதன்போது கூட்டத்தில் கலந்துகொண்ட அவர் கூட்டத்தின் இடைநடுவில் வெளிநடப்பு செய்தார்.

இது தொடர்பாக வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவிக்கையில் –

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை செவிமடுப்பதாக தெரியவில்லை. தன்னிச்சையாகவே செயற்படுகின்றார்.

அத்துடன் ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களுக்கு சரியான முறையில் அழைப்பு விடுக்கபடுவதில்லை. கிராமட்ட அமைப்புகளுக்கு கூட இன்றைய (நேற்று முன்தினம்) கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கபடவில்லை. இந்த நிலையில், கிராமங்களில் காணப்படும் பிரச்சினைகளை எவ்வாறு அறிந்து கொள்ளமுடியும்.

அத்துடன், பிரதேச செயலாளர் ஒரு கட்சி சார்ந்து செயல்படுவதாகவே தெரிகிறது. அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளுடன் இணைந்து செயற்படுமாறு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவிலும் தீர்மானம் எடுக்கப்பட்டது. தீர்மானம் எடுத்த பின்பும் கூட நடைமுறைகளில் எந்த மாற்றமும் வரவில்லை. இதன் காரணமாகவே கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்தேன். இது தொடர்பாக எதிர்வரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டங்களில் தீர்க்கமான முடிவெடுக்க உள்ளேன் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் மாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ம.தியாகராஜா ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (கு-100)

காலைக்கதிர் Kalaikkathir



## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சிந்திக்க வைத்தன.

"இலங்கையில் பணி முடித்து திரும்பும் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஸாப்புக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது, கோட்டாபாய ராஜபக்ஷவின் இரட்டைப் பிரஜாவுரிமை விடயம் குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்ட வற்றை நீங்கள் உங்கள் பத்திரிகையில் விலாவாரியாக எழுதி பெரும் பூகம்பத்தையே கிளப்பி விட்டீர்கள். அதன் அதிர்வு இன்னும் தொடருகின்றது.

"அந்த விடயம் வெளிவந்ததால் அமெரிக்கத் தூதுவருக்கு உள்ளகச் சிக்கல் என்று தெரிகின்றது. ஆனாலும் செய்தியை 'லீக்' செய்தவர் யார் என்பது இன்னும் ஒருவருக்கும் தெரியாது. அது, அதை கசிய விட்டவரின் அரசியல் முதிர்ச்சியை (Political Maturity) காட்டுகின்றது. அதனால்தான் மூலம் தெரியாமல் - மூலத்தைத் தெரியப்படுத்தி, அம்பலப்படுத்தாத தரப்பு வாயிலாக - அந்தச் செய்தியை அவர் கசிய விட்டிருக்கின்றார்.

"ஆனால், அண்மையில் கனடாத் தூதுவர் யாழ். வந்தபோது முதல்வர் விக்னேஸ்வரனைச் சந்தித்தார். மூடிய அறைக்குள் முதல்வருடன் மனம் திறந்து பேசினார்.

"பேச்சு பல விடயங்களை பற்றி அமைந்தது. பேசி முடிந்து புறப்படும் கடைசி நேரத்தில்தான் 'உங்கள் புதுக்கட்சி ஆரம்பம் முயற்சி எப்படி இருக்கின்றது?' என்று சாட்டுக்கு ஒரு கேள்வியை அவர் கேட்டு வைத்தார். அதற்கு முதல்வர் பதிலளித்ததும் புறப்பட்டார் கனடாத் தூதுவர்.

அப்படிப் புறப்படும்போது முதல்வரிடமும் அவருடன் அவருக்கு உதவியாளராகப் பங்குபற்றிய ஒருவரிடமும் விநயமாக ஒரு கோரிக்கையை முன் வைத்திருக்கின்றார் தூதுவர். 'இது எங்கள் தனிப்பட்ட பேச்சு; தனிப்பட்ட சந்திப்பு. இங்கு பேசப்பட்டவை ஊடகங்களுக்கோ பகிரங்கத் தரப்புகளுக்கோ பகிர அவசியமற்றவை' - என்று வலியுறுத்திக் கூறினார்.

"அவர் அப்படிக் கூறியமைக்கு ஒரு காரணம் இருந்தது. தன்னுடன் பேசுபவர் அரசியல் நெளிவு, சுழிவுகளுக்குள்ளால் வந்த அரசியல்வாதி அல்லர், அரசியலில் புதியவர். மூடிய அறைக்குள் பேசியவற்றை வெளியில் பகிர வேண்டாம் என்று அவருக்குக் கூறிவைப்பது அவசியம் என உணர்ந்துதான் அப்படிச் சொல்லி வைத்தார்.

"ஆனால், வெளியில் வந்த முதல்வர் புதிய கட்சி அமைப்பது பற்றியெல்லாம் கனடாத் தூதுவர் என்னிடம் கேட்டார், நான் இப்படி, இப்படியெல்லாம் பதிலளித்தேன் என்று விலாவாரியாக விடயத்தைப் போட்டுடைத்திருக்கின்றார்.

சந்திப்பை முடித்துக் கொண்டு புறப்பட்ட கனடாத் தூதுவர் யாழ்ப்பாணத்தில் நின்ற போதே முதல்வரின் பகிரங்கத் தகவல் வெளியீடு பற்றிக் கேள்விப்பட்டு விட்டார். அவரின் யாழ். விசிட்டே அதனால் 'அப் - செட்' ஆகிவிட்டது போலும்.

"என்னைக் கேட்டீர்களானால் முதல்வரின் இந்தச் செயற்பாட்டுக்கு அவரின் அரசியல் முதிர்ச்சியின்மையே காரணம் என்பேன்.

"இராஜதந்திரத் தரப்புகளுடன் பழகுவது மிகக் கவனமாக இருக்க வேண்டிய விடயம். முதல்வரின் பகிரங்கக் கருத்தால் கனடாத் தூதுவர் மிகுந்த 'அப்-செட்' ஆகியுள்ளார் என மிக நம்பிக்கையாக அறிகிறேன்.

"உட்கட்சி விடயங்கள் பற்றியெல்லாம் கனடாத் தூதுவர் மூக்கை நுழைத்து ஆராய்கிறார் என்ற கருத்து நிலைப்பாடு வெளிப்படுவது தமக்கு நல்லதல்ல என்றே தூதுவர் நினைக்கிறார்.

அது மட்டுமல்ல, 'நான் தனிக்கட்சி தொடங்குவேனோ என்று உன்னிப்பாக என்னிடமே கேட்டுத் தெரிந்து, அறிந்து கொள்ளும் அதீத ஈடுபாட்டுடன் கனடா போன்ற மேற்குலக நாடுகள் உள்ளன. ஆகவே கவனமாக நடந்து கொள்ளுங்கள்!' என்ற சாரப்பட கூட்டமைப்புத் தலைமைக்கும் ஒரு செய்தியைக் கொடுப்பதற்கும் தன்னுடனான இந்தச் சந்திப்பை முதல்வர் விக்கி பயன்படுத்திக் கொண்டாரோ என்ற எரிச்சலும் கனடாத் தூதருக்கு ஏற்பட்டுள்ளது." - இப்படி இராஜதந்திர வட்டாரங்களுடன் மிக நெருக்கமான தொடர்புடைய அந்தப் பிரமுகர் விலாவாரியாக விவரித்தார்.

"எங்கள் முதல்வர் பாவம். அரசியலில் பட்டுத் தேர்ந்தவர் அல்லர். வெள்ளை மனது. மனதில் பட்டதை அப்பட்டமாகப் பேசுபவர். அதுதான் அவரது அரசியலுக்கே எதிரி. கனடாத் தூதுவருடன் பேசியவை என்ன என்று செய்தியாளர்கள் கேட்டதும் கள்ளமில்லாத மனதுடன் ஒப்புவித்திருப்பார். அதற்குப் பின்னால் இப்படி சமாச்சாரங்கள் எல்லாம் புதைந்து கிடக்கும் என அவர் கனவிலும் கூட சிந்திக்க மாட்டார்." - என்றேன் நான்.

அதுதான் உண்மை. முதல்வர் கதிரையில் அவர் எதிர்நோக்கிய பல பிரச்சினைகளுக்கு அரசியல் நெளிவு, சுழிவு அறிந்திராத - கள்ளம், கபடம் புரியாத - அவரது போக்கும் ஒரு காரணம் தான்!

- மின்னல் -

## தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்தத்தின் நிமித்தம் இலங்கை பாரிய முன்னேற்றங்களை அடைய முடியவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய இரா. சம்பந்தன், எழுபது ஆண்டுகள்கடந்தும் இன்னமும் தேசியப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதையும் சுட்டிக் காட்டினார். சமகால அரசாங்கம் இது தொடர்பில் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்திய இராசம்பந்தன் சுய கௌரவம் மற்றும் சமத்துவ அடிப்படையிலான ஒரு புதிய அரசியல் யாப்பினூடாக சமாதானமான ஒரு தீர்வை நாம் எதிர்பார்க்கிறோம் எனவும் தெரிவித்தார். மேலும் அத்தகைய ஓர் அரசியல் அதிகாரப் பகிர்வைக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு நாம் ஒத்துழைப்பை வழங்குவோம் எனவும், இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை புத்த பெருமானின் போதனைகளின் பிரகாரம் நியாயமான தாகச் சரியாக செய்வதன் மூலம் அடைந்துகொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

பாரிய முதலீடுகள் தொடர்பில் கருத்து தெரிவித்த இரா. சம்பந்தன் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் காணப்படும் தேவையை வலியுறுத்திய அதேவேளை, தாய்லாந்து தனியார் முதலீட்டாளர்களை வடக்கு, கிழக்கில் முதலீடுகளை மேற்கொள்ளும் நோக்கில் ஊக்கப்படுத்த வேண்டும் எனவும் பிரதமர் அவர்களைக் கேட்டுக்கொண்டார். மேலும் வடக்கு, கிழக்கில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புக்கான தேவை அதிகமாக உள்ளதனையும் அவர்களது பொருளாதார நிலைமை சீர் செய்யப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

தாய்லாந்து முதலீட்டாளர்களினால் வடக்கில் நிறுவப்படவுள்ள சீனித்தொழிற்சாலை தொடர்பிலான முன்னேற்பாடுகளை வரவேற்ற இரா. சம்பந்தன், இந்த வகையிலான முதலீடுகள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இப்பிரதேசங்களுக்கு அதிகமாக கொண்டுவரப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். மேலும் மிக கடினமான உழைப்பாளிகளை கொண்ட இப்பிரதேசங்களின் அபிவிருத்தியில் யுத்தம் பாரிய பின்னடைவினை ஏற்படுத்தியதை எடுத்துரைத்த இராசம்பந்தன் புதிய முதலீடுகள் வடக்கு கிழக்கில் மாத்திரமல்லாது முழு நாட்டு மக்களினதும் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் எனவும் தெரிவித்தார்.

இதன் போது கருத்து தெரிவித்த தாய்லாந்து பிரதமர் நிச்சயமாக தாய்லாந்து தனியார் முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடுகளை செய்வதற்கு ஊக்கப்படுத்துவேன் என உறுதியளித்த அதேவேளை எதிர்காலத்தில் இந்த முதலீடுகள் நடைமுறைக்கு வருவதை உறுதிசெய்து அவற்றிக்கு ஆதரவு நல்குமாறும் எதிர்க்கட்சித் தலைவரை வேண்டிக் கொண்டார்.

எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தன் அவர்களோடு தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரனும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தார்.

## குற்றங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாருக்கும் குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கும் இடையே நெருங்கிய தொடர்புள்ளது எனத் தன்னால் தெரிவிக்கப்பட்டது எனவும் அதனை பொலிஸ்மா அதிபர் ஏற்றுக் கொண்டார் எனவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு இரண்டு நாள் பயணமாக வருகை தந்த சட்டம், ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார, பிரதி அமைச்சர் நளின் பண்டார மற்றும் பொலிஸ் மா அதிபர் பூஜி ஜயசுந்தர ஆகியோர், வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பு கைதடியிலுள்ள வடக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் பிற்பகல் இடம்பெற்றது.

சந்திப்பின் நிறைவில் செய்தியாளர்களிடம் முதலமைச்சர் கருத்துத் தெரிவித்தார்.

அவர் தெரிவிக்கையில் -

குற்றச் செயல்கள் அதிகரிக்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்த பொலிஸ் ஆளணிப் பற்றாக்குறை உள்ளது. தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவேண்டும்.

பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் பற்றாக்குறை உள்ளது என்று பொலிஸ் மா அதிபரிடம் எடுத்துக்கூறினேன். - என்றார். (ஐ-7)

# கல்வித் துறை ஊழியர்களின் குறைகளை களைய வலயம் தோறும் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 14

வடக்கின் கல்வியில் அர்ப்பணிப்புடன் பணியாற்றும், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்களின் தாபன மற்றும் நிர்வாக அலுவலகக் குறைகளைக் களைந்து கல்வியின் விளைத்திறனை மேம்படுத்தும் வகையில் மாபெரும் நடமாடும் சேவை ஒவ்வொரு வலயங்களிலும் நடைபெறவுள்ளது.

கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரனின் நேரடி நெறிப்படுத்தலின் கீழ், அவரது பங்குபற்றுதலுடன் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் அனைவரினதும் பங்கேற்புடன் அந்தந்த வலயங்களில் இது நடைபெறவுள்ளது.

அதற்கமைய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்களின் நீண்டகாலமாக தீர்க்கப்படாதுள்ள பிரச்சினைகளான சுயவிவரக் கோவைகள் பூர்த்தி, சம்பள உயர்வுகள், பதவி உயர்வுகள், விதவைகள் அநாதைகள் ஓய்வு ஊதிய இலக்கம், ஆசிரியர் பதிவு இலக்கம், கற்கை விடுமுறைகள், சம்பளமற்ற விடுமுறைகள், வெளிநாட்டு விடுமுறைகள், பிரசவ விடுமுறைகள், பிரமாணக் குறிப்பின்படி உள்ளீர்ப்பும் நியமனமும், பொருத்தமான நேரசூசியின்மை, ஏனைய நிர்வாகம், பாடசாலை சார்ந்த பிரச்சனைகள், ஆசிரியர் விடுதிகள், பாடசாலையின் அடிப்படைத் தேவைகள் தொடர்பான அனைத்துப் பிரச்சனைகளுக்கும் விரைந்து தீர்வு வழங்குவதற்காக 19.07.2018 தொடக்கம் 02.08.2018 வரை வடக்கு மாகாணத்தின் சம்பந்தப்பட்ட பன்னிரண்டு வலயங்களிலும் இது நடத்தப்படவுள்ளது.

அந்தந்த வலயங்களில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் தமது பிரச்சினைகளை எழுதி, இம்மாதம் பதினேழாம் திகதிக்கு முன்னர் 'கலாநிதி க.சர்வேஸ்வரன், வடமாகாண கல்வி அமைச்சர், கல்வி அமைச்சு அலுவலகம், செம்மணிவீதி, நல்லூர்' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

வலயங்களில் நடத்தப்படவுள்ள நடமாடும் சேவைகளின் திகதிகளும், நேரங்களும் வருமாறு:-

- ★ 19.07.2018 - மன்னார் - 2.00 மணிக்கு.
- ★ 20.07.2018 - யாழ்ப்பாணம் 2.00 மணிக்கு
- ★ 21.07.2018 - தென்மராட்சி - 2.00 மணிக்கு.
- ★ 23.07.2018 - வடமராட்சி - 2.00 மணிக்கு.
- ★ 24.07.2018 - கிளிநொச்சி - 2.00 மணிக்கு.
- ★ 25.07.2018 - முல்லைத்தீவு - 2.00 மணிக்கு.
- ★ 28.07.2018 - வவுனியா தெற்கு - 2.00 மணிக்கு.
- ★ 28.07.2018 - வவுனியா வடக்கு 8.30 - மணிக்கு.
- ★ 30.07.2018 - மடு - 2.00 மணிக்கு.
- ★ 31.07.2018 - தீவகம் - 2.00 மணிக்கு.
- ★ 01.08.2018 - வலிகாமம் - 2.00 மணிக்கு.
- ★ 02.08.2018 - துணுக்காய் - 2.00 மணிக்கு.

## சிறப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆரம்பிக்கின்றது.

கொழும்பு மோட்டார் வாகனம் தொடர்பான நீதிமன்ற வளாகத்திலேயே இந்த மேல் நீதிமன்றம் இயங்கவுள்ளது. அதனைச் சீரமைக்கும் பணிகளில் கடற்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பெரும் நிதி மோசடி, ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுக்களுடன் சம்பந்தப்பட்டவர்களை விசாரணை நடத்தி, தண்டனை வழங்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் நோக்கிலேயே இந்த மேல் நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

வார நாள்களில் தினமும் அமர்வை நடத்தி வழக்கு விசாரணைகளை இந்த மன்று முன்னெடுக்கவுள்ளது. இதற்காக மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரை பிரதம நீதியரசர் கடந்த மாதம் நியமித்திருந்தார்.

நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட திருத்தச் சட்டத்தின் மூலம் மூன்று சிறப்பு மேல் நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன. ஏனைய இரண்டு மேல் நீதிமன்றங்களையும் புதுக்கடை மேல் நீதிமன்ற வளாகத்தில் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக சட்டமா அதிபர் அலுவலகத்திற்கு, 100 அரச சட்டத்தரணிகள் புதிதாக சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதில் 50 பேரை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் தற்சமயம் கோரப்பட்டுள்ளன.

## சபாநாயகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ளார் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

சபாநாயகர் தெற்காசிய சபாநாயகர்கள் மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தார். அத்துடன் மேலும் சில பணிகளிலும் கடந்த சில தினங்களாக மும்முரமாக ஈடுபட்டிருந்தார். இதன் காரணமாகவே அவருக்கு இந்தத் திடீர் சுகவீனம் ஏற்பட்டுள்ளதாக சபாநாயகரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## வடபகுதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த இளைஞனை அவரது 22 வயதுடைய நண்பரே கொலை செய்துள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உதைப்பந்தாட்டப்போட்டியை பார்வையிட சென்ற இலங்கை இளைஞர்கள் இருவருக்குள் ஏற்பட்ட மோதலே கொலைக்கான காரணம் என்றும் ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை லண்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மரண தண்டனையும் மதங்களும்

**போதைப் பொருள் கடத்தல்கள் மற்றும் பாதாள உலகக் கோஷ்டிகளின் அட்டகாசங்களை அடக்கமுடியாமல், அவற்றைக் கண்டு மிரண்டு போயிருக்கும் ஆட்சித் தரப்பு, புதிது புதிதாக பல நடவடிக்கைகளை எடுக்க முனைகின்றது.**

**இந்தச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு விசேட நடவடிக்கையாக முப்படையினருக்கும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்றும், அதற்கேற்ற சட்டத்திருத்தங்களை அவசர அவசரமாகக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது.**

**இது தொடர்பில் ஜனாதிபதியுடன் இணைந்து சட்டம் மற்றும் ஒழுங்குகள் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.**

**இந்த முயற்சிகள் – போக்குகள் – இரண்டு விடயங்களுக்குக் கட்டியம் கூறப்போகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விழைகிறோம்.**

**நல்லாட்சி என்ற பெயரில் அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைப் பொறுத்தவரை, அவர் மீண்டும் ஜனாதிபதியாவதற்கான வாய்ப்பு என்பது துர்லபமாகி வருகின்றது. அதற்கான சந்தர்ப்பம் பெரும்பாலும் இல்லை என்பது அரசியலில் அரிச்சுவடி படித்தவருக்கும் புரியும் விடயம்.**

**அவரது எஞ்சியிருக்கும் 16 அல்லது 17 மாத கால பதவிக் காலத்தில், நாடு மீண்டும் இருண்ட யுகத்துக்குள் நுழைவதற்கான வாய்ப்புக்களை இப்படி பொலிஸ் அதிகாரங்களை ஏனைய முப்படையினருக்கும் வழங்கும் திட்டம் ஏற்படுத்தும் என்றும் சில தரப்புகள் அஞ்சும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது.**

**அடுத்து – சிறையில் இருக்கும் பாதாள உலகக் கோஷ்டியினரையும் மரண தண்டனைக் கைதிகளையும் கட்டுப்படுத்தி வைக்கத் தெரியாமல், மீண்டும் மரண தண்டனையை நடைமுறைப்படுத்தும் திட்டத்தை நோக்கி ஓடும் இந்த அரசுத் தலைமையுடன் ஒப்பிடுகையில் –**

**இத்தகைய விடயங்களை முன்னர் இரும்புக் கரம் கொண்டு அடக்கிய முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ எவ்வளவோ மேல் என்ற எண்ணம் தென்னிலங்கை மக்களுக்கு வந்தாலும் வந்துவிடும்.**

**அதுவும் மரண தண்டனையை மீள நடைமுறைப்படுத்தும் ஜனாதிபதியின் முயற்சிக்கு தென்னிலங்கை மத பீடங்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவு மலைக்க வைக்கின்றது.**

**கடந்த 42 வருடங்களாக மரண தண்டனையை நடைமுறைப்படுத்தாமல் தவிர்த்தமை மூலம் தான் கட்டிக் காத்து வந்த கீர்த்தியை – நற்பெயரை – இலங்கை தனது தற்போதைய நடவடிக்கை மூலம் தொலைக்கப் போகின்றது என்று சர்வதேச மன்னிப்புச் சபை விசனம் தெரிவித்திருக்கின்றது.**

**ஐரோப்பிய நாடுகள் பலவும் மரண தண்டனை நிறைவேற்றும் முறைமையைக் கைவிட்டு விட்டன.**

***"மரண தண்டனை நிறைவேற்றுவது என்பது மனிதாபிமானமற்றது; கொடூரமானது; தேவையேயற்றது"* – என்று ஐரோப்பிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

**அதுமட்டுமல்ல, ஏனைய தண்டனை முறைமைகளை விட மரணதண்டனை முறைமை குற்றங்களைக் குறைக்கும் என்று கருதுவதற்கு எந்த விதமான விஞ்ஞானபூர்வமான ஆதாரங்களும் இல்லை என்றும் ஐரோப்பிய ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.**

**மேலும், நீதித் தீர்ப்பு முறைமையில் ஏதேனும் தவறு ஏற்படுமானால் அது வேண்டுமென்றே ஒரு மனித உயிரை அரசே பறித்த படுகொலையாகி விடும் என்றும் அது தெரிவித்துள்ளது.**

**இவ்வாறான நிலைப்பாட்டை ஐரோப்பிய ஒன்றியம் எடுத்திருக்கும் சூழ்நிலையில், அதற்கு மாறாக மரண தண்டனையை நிறைவேற்றும் முடிவை அரசு செயற்படுத்துமானால், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடம் இருந்து இலங்கைக்குக் கிடைக்கவுள்ள ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை இலங்கை இழக்க வேண்டியும் நேரலாம் என்றும் கூறப்படுகின்றது.**


**இதற்கிடையில் –**

**மரண தண்டனையை மீளவும் நடைமுறைக்குக் கொண்டு வரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முடிவை வரவேற்றுள்ள பொதுபல சேனாவின் தலைவர் வண. கலகொட அத்தே ஞானசார தேரர், இனிமேல் வரக் கூடிய சர்வதேச அழுத்தத்துக்கு அடிபணிந்து தன் முடிவிலிருந்து ஜனாதிபதி பின்வாங்கி விடக் கூடாது எனக் கூறியிருக்கின்றார்.**

**இதற்கிடையில், கிறிஸ்தவ மதத் தலைவரான கர்தினால் மல்கம் ரஞ்சித் கூட இந்த மரண தண்டனை முறைமையத் தாங்கள் வரவேற்கின்றனர் என்று பகிரங்கமாக அறிவித்துப் பரபரப்பு ஏற்படுத்தியிருக்கின்றார்.**

**கருணை, காருண்யம் பேச வேண்டிய மதத் தலைவர்கள் கௌதம புத்தரும், இயேசு பிரானும் போதித்தவற்றை ஒரு தடவை நினைவில் கொள்வது நல்லது என்று கூற விழைகிறோம்.**

## பிரான்ஸ், இலங்கைக்கு இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து



கொழும்பு, ஜூலை 14

இலங்கை முதலீட்டுச் சபை, ஏற்றுமதி அபிவிருத்தி சபை, பிஸ்னஸ் பிரான்ஸ் அமைப்பு ஆகியவை புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

இதன்மூலம் உற்பத்தி, உட்கட்டமைப்பு வசதிகள் முதலான துறைகளில் பிரான்ஸின் முதலீடுகளை அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு கிடைக்கும் என்று முதலீட்டு சபையின் தலைவர் துமிந்த ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது முதலீட்டுச்சபையின் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## இளைஞர்களை கடத்தப் பயன்படுத்திய வாகனம்: விவரம் வழங்க மறுக்கும் இலங்கைக் கடற்படை

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் தொடர்பான தகவல்களை இலங்கைக் கடற்படை இன்னமும் தமக்கு வழங்கவில்லை என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் தொடர்பான தகவல்கள் இந்த விசாரணைக்குத் தேவைப்படுகின்ற போதும் இலங்கைக் கடற்படை தலைமையகம் அதனை இன்னமும் வழங்கவில்லை என்று கோட்டே நீதிவானிடம், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர்.

அந்த வாகனம் முற்றாக பிரிக்கப்பட்டுள்ளது. அதுபற்றிய அறிக்கை குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைக்கவில்லை.

அத்துடன், 2008ஆம் ஆண்டுநடந்த இந்தக்கடத்தல்கள் தொடர்பான, பிரதான சந் தேக நபரானகடற்படையின்முன்னாள் லெப்.கொமாண்டர்சந்தனபிரசாத் ஹெட்டியாராச்சி யின் கீழ் இருந்த கடற்படையினர் பயன்படுத்திய உந்துருளிகள் தொடர்பான எந்த விவரங்களும் தரப்படவில்லை என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## மல்லாகம் மோதல் சம்பவ வழக்கு: பிணை குறித்து 20ஆம் திகதி முடிவு

யாழ்ப்பாணம் மல்லாகம் பகுதியில் கடந்த மாதம் இடம்பெற்ற வாள்வெட்டு மோதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான கட்டளை வழங்குவதற்காக வழக்கு விசாரணையை எதிர் வரும் 20ஆம் திகதி வரை ஒத்திவைத்து மல்லாகம் நீதிமன்ற மேலதிக மாவட்ட நீதிபதி ஆனந்தராஜா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் யாழ்.மல்லாகம் பகுதியில் உள்ள தேவாலயத் திருவிழாவின் போது இரு குழுக்களுக்கு இடையில் பாரிய மோதல் சம்பவமொன்று இடம்பெற்றிருந்தது. இதன்போது அவ் வீதியூடாக சென்ற சுன்னாகம் பொலிஸார் அந்த மோதல் தொடர்பாக விசாரணை செய்ய முற்றப்பட போது பொலிஸார் மீது தாக்குதல் நடத்த முயற்சிக்கப்பட்டதை அடுத்து பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டிருந்தார்.

இந்நிலையில் இம் மோதல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட தெல்லிப்பழை பொலிஸார் அதனோடு தொடர்புபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் பத்துக்கும் மேற்பட்டோரை கைது செய்தனர். அவர்கள் மல்லாகம் நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சார்பாக நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி கே.சுகாஸ் இந்த நபர்கள் அச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களே தவிர, அவ் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் அல்லர், எனவே அவர்களுக்குப் பிணை வழங்க வேண்டும்எனக்கோரியிருந்தார்.

இதனையடுத்து அது தொடர்பான கட்டளையொன்றை நேற்றைய தினம் பிறப்பிக்க மல்லாகம் நீதிமன்ற நீதிவான் அலெக்ஸ்ராஜா உத்தரவிட்டிருந்தார். இருந்த போதிலும் நேற்று அந்த வழக்கு பிறிதொரு நீதிவான் முன்னிலையிலேயே எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதனால் அந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் 20ஆம் திகதி வரை ஒத்திவைத்ததுடன் அது வரை சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்கவும் மல்லாகம் நீதிமன்ற மேலதிக மாவட்ட நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார்.

## 'எம்.வீ. சன் சீ' கப்பலினால் கனடாவில் சுற்றாடல் சிக்கல்

ஐந்நூறு தமிழ் அகதிகளை ஏற்றிக்கொண்டு எட்டு வருடங்களுக்கு முன்னர் கனடாவைச் சென்றடைந்த 'எம்.வீ.சன்சீ' என்ற கப்பல் தற்போது பாரிய சுற்றாடல் பிரச்சினைகளை ஏற்படுத்தும் ஒன்றாக மாறியிருப்பதாக கனடா அரசாங்கம் தெரிவித்துள்ளது. 52 மீற்றர் நீளம்கொண்ட இந்த கப்பல் 38 வருடங்கள் பழமையானது,

கனேடிய எல்லைப் பாதுகாப்பு சபையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட இந்த கப்பல் நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், அதில் இருந்து தற்போது சுற்றாடலுக்கும், கடற்சூழலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் இரசாயனங்கள் வெளியாகி வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த எட்டு வருடங்களாக இந்தக் கப்பலை நிறுத்தி வைத்து பராமரிப்பதற்கு பிராந்திய அரசாங்கம் 9 லட்சத்து 70 கனேடிய டொலர்களை செலவிட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இந்த கப்பலை உடைப்பதற்கான ஒப்பந்தம், கப்பல் உடைக்கும் நிறுவனங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட போதும், கப்பலின் இயந்திரங்கள் உள்ளிட்ட அனைத்து பாகங்களையும் அந்த நிறு வனங்கள் கொண்டு செல்ல வேண்டும் என்ற நிபந்தனையால், இந்த திட்டம் கிடப்பில் இருக்கின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விற்பனைநிலையத்தில் திருடர்கள் கைவரிசை

மன்னார், ஜூலை 14

மன்னார் பொது வைத்தியசாலை பிரதான வீதியின், செபஸ்தியார் பேராலயப் பகுதியில்அமைந்துள்ளபல்பொருள் விற்பனை நிலையத்தில்நேற்று அதிகாலை திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தப் பல்பொருள் விற்பனை நிலையம் வியாழன் இரவு 10.30 மணியளவில் மூடப்பட்ட நிலையில், நேற்றுக் காலை மீண்டும் குறித்த விற்பனை நிலையத்தை திறக்க முற்பட்ட போது விற்பனை நிலையம் திருடர்களினால் உடைக்கப்பட்டு சூறையாடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

விற்பனை நிலையத்தின் முன் கதவின் பூட்டுகள் உடைக்கப்பட்டு கதவினை திறந்து உள்ளே சென்ற திருடர்கள் தொலைபேசி மீள் நிறப்பு அட்டைகள், புகை பொருள்கள் மற்றும் பணம் என மொத்தமாக ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்கள் மற்றும் பணம் என்பவை திருடிச் செல்லப்பட்டுள்ளன என விற்பனை நிலையஉரிமையாளர்தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக அந்த விற்பனை நிலையத்தின் உரிமையாளர் நேற்றுக் காலை மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாடு செய்த நிலையில் மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (கு)

## நாளை

15.07.2018
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம் : ஆயிலியம் மாலை 6.03 வரை
திதி : திருதியை பி.இ 2.19 வரை
சுபநேரம் : 9.00 – 10.30 வரை
இராகுகாலம் : 4.30 – 6.00 வரை

# படகுகள் ஒழுங்குபடுத்தல் திருத்தச் சட்டத்தை முறைப்படி அமுல்படுத்துங்கள்: கடற்றொழிலாளர் இணையம்



கொழும்பு,ஜூலை 14

வெளிநாட்டுப் படகுகள் ஒழுங்கு படுத்தல் திருத்தச்சட்டம் மற்றும் உள் ளூர் இழுவைப்படகுகள் தடைச்சட்டம் போன்றவற்றை முறைப்படி நடை முறைப்படுத்துங்கள் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் தெரி வித்துள்ளது.

இதுதொடர்பில் வடமாகாண கடற் றொழிலாளர் இணையத்தின் செயலாளர் வி.சுப்பிரமணியம் தெரிவிக்கையில் –

வடமாகாண கடற்றொழிலாளர் எதிர் நோக்கும் பிரச்சினைகள், இந்திய இழு வைப்படகு விடுவிப்பு தொடர்பாகவும் இழுவை மடித்தொழிலால் ஏற்படும் இழப் புக்கள், மீன்பிடி தொடர்பில் இயற்றப்பட்ட சட்டங்கள், உள்ளூர் இழுவைப் படகுக ளின் தாக்கங்கள் மற்றும் சட்டவிரோத மீன்பிடித்தொழில்கள், தென் பகுதி மீன வர்களின் வடபகுதியை நோக்கிய அத்துமீறல்கள் என்பன தொடர்பில் கடற்றொழில் அமைச்சருடன் கலந்து ரையாடினோம்.


இந்தியா பல தடவைகள் பல்வேறு விடயங்களைக் கூறியுள்ளபோதிலும் எவற்றையும் நடைமுறைப்படுத்த வில்லை. தொடர்ந்தும் எம்மை ஏமாற்றி வருகின்றது. இவ்வாறான சூழலில் தற்போதைய கடற்றொழில் அமைச்சர் விஜயமுனி செய்சா பதவியேற்ற பின்னர் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய படகுகளின் விடுவிப்பு தொடர்பில் அழுத் தங்கள் மேலோங்கி நிற்கின்றன.

இதில் எமது கருத்துக்கள் என்ன என்று கேட்டார்கள். குறிப்பாக இந்தியா எங் களை பலமுறை ஏமாற்றி விட்டது. எங் களுக்கு தந்த உறுதிமொழிகள் எவற் றையும் நிறைவேற்றவில்லை. எனவே இந்தியாவை நம்பவேண்டாம். அவர் களை நம்பி பேச்சுக்குச் செல்லவேண் டாம்.

இதற்கு பரிகாரமாக கடந்த வருடம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட இழுவை மடிச் சட்டம் மற்றும் இந்த வருடம் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டவர் படகு ஒழுங்குபடுத்தல் திருத்தச்சட்டம் போன்ற வற்றை இதயசுத்தியுடன் நடைமுறைப் படுத்தி எல்லை தாண்டி வருகின்ற இந் திய இழுவைப் படகுகளைக் கைப்பற்றி அவற்றைத் தடுத்து வைக்க முடியும்.

இந்த இரண்டு சட்டங்களையும் முறை யாக நடைமுறைப்படுத்தினால் இந்தி யாவிடம் நாம் செல்லவேண்டிய தேவை யில்லை. மேலும் இவ்விடயம் தொடர்பாக ஒரு குழுவை நியமித்து ஆராய்வோம் என்று தெரிவித்தார். இதற்கு நாங்கள் நியமிக்கின்ற நபர்களை குழுவாக நிய மிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளோம். அதனை அமைச் சர் ஏற்றுக்கொண்டார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கு)

## தங்கத் துண்டுகளுடன் இந்திய பிரஜை கைது!



கொழும்பு, ஜூலை 14

சட்ட விரோதமான முறையில் தங்க துண்டுகளை மறைத்து இலங்கைக்கு கடத்திவர முயன்ற இந்திய பிரஜை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் நேற்று முன்தினம் கோலாலம்பூரிலிருந்து யு.எல். 319 வகையான விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்து வெளியேறும் போது இந்த நபரின் பயண பொதியில் மறைந்து வைக்கப்பட்டிருந்த தங்கத் துண்டுகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள் ளனர்.

இந்த நபர் அவரது பயண பை, உள்ளாடை மற்றும் காலணிகளில் மறைத்தே தங்கத்துண்டுகளை இலங்கைக் குள் கடத்த முற்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சந்தேக நபர் தமிழ் நாட்டைச் சேர்ந்த 28 வய தான நபரே என அதிகாரிகள் தெரிவித்தனர். கைதுசெய் யப்பட்டவரிடம் மேலதிக விசாரணை மேற்கொள்ளப் பட்டு வருகிறது என விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சிறையில் தொலைபேசி வியாபாரம்; ஓர் அழைப்புக்கு 2 ஆயிரம் ரூபா!

கொழும்பு, ஜூலை 14

வெலிக்கடை சிறைச்சாலை யில் உள்ள தண்டனை விதிக்கப் பட்ட சிறைக்கைதிகள் கடந்த மார்ச் மாதத்தில் மாத்திரம் சிறைக் கூடங்களில் இருந்துகொண்டே வெளியில் 3ஆயிரத்து 950 கைய டக்கத்தொலைபேசி அழைப்புக் களை ஏற்படுத்தியிருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது என விசேட அதிரடிப்படை, திட்டமிட்ட குற்றச் செயல்கள், போதைப்பொருள் ஒழிப் புப்பிரிவுக்குப்பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் எம். ஆர்.லத்தீப் தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்



நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இவ்வாறு சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் ஒரு தொலை பேசி அழைப்புக்கு சிறைக்குள் 2 ஆயிரம் ரூபா வீதம் அறவிடப் படுகிறது.

மலேசியா, நைஜீரியா போன்ற நாடுகளுக்கும் இவ்வாறு அழைப் புக்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அது மாத்திரமன்றி அந்த மாதத் தில் 360 அழைப்புக்கள் உள்வந் துள்ளன. அழைப்பொன்றுக்கு 2,000 ரூபா வீதம் அறவிடப்பட்டு கின்றமை அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறியுள்ளார்.

## வெளிநாட்டு கரன்ஸிகளுடன் கட்டுநாயக்கவில் மூவர் கைது

கொழும்பு, ஜூலை 14

சட்ட விரோதமான முறையில் வெளிநாட்டு நாணய தாள்களை மறைத்து இலங்கைக்கு கடத்தி வர முயன்ற இந்திய பிரஜை ஒரு வரும், இரு இலங்கை பிரஜை களும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர்கள் நேற்று அதி காலை 2 மணியளவில் சிங்கப் பூரில் இருந்து இலங்கைக்கு யு.எல். 306 விமானத்தில் கட்டு நாயக்க விமான நிலையத்துக்கு வந்து போது இந்த நபர்களிட மிருந்து சுங்க அதிகாரிகள் நாணய தாள்களை கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்தியர் 40 வயதுடையவர் எனவும் இலங் கையர்கள் இருவரும் 40 மற்றும் 45 வயதுடையவர்கள் எனவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சுங்க அதிகாரிகள் சோதனை



யிட்டபோது அவர்களிடமிருந்து சுமார் 4 கோடி 80 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணய தாள்கள் இருந்தன என சுங்க ஊடக செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

பறிமுதல் செய்யப்பட்ட வெளி நாட்டு நாணயங்களில் 153,250 யூரோ, 52,950 அமெரிக்க டொலர்கள், 264,000 சவூதி ரியால், 18,500 கட்டார் ரியால் என்பவ அடங்குகின்றன என சுங்க அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என விமான நிலைய சுங்க அதிகாரி கள் தெரிவித்துள்ளனர்.

## மோட்டார் சைக்கிள் விபத்து; ஒருவர் பலி


மட்டக்களப்பு, ஜூலை 14

கல்முனை – அக்கரைப் பற்று பிரதான வீதியின் நிந்தவூர் பகுதியின் இடம்பெற்ற வாகன விபத்தின்போது ஒருவர் உயிரி ழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளொன்றும் கனரக வாகனமொன்றும் மோதி யதிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. அத்துடன், இந்த சம்பவத்தில் மோட்டார் சைக்கி ளின் சாரதியே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.

## மத்தள விமானநிலையத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்




கொழும்பு, ஜூலை 14

மத்தள விமானநிலை யத்தில்பொருத்தப்பட்டிருந்த நான்காவது பாதுகாப்பு ஸ்கேனர் கருவி அகற்றப் பட்டுள்ளதால் விமான நிலையத்தின் பாதுகாப்பு மேலும் கேள்விக்குறியாகி யுள்ளது எனத் தெரிவிக்கப் படுகின்றது.

பயணிகள் வருகை தரும் பகுதியில் பொருத் தப்பட்டிருந்த பாதுகாப்பு ஸ்கேனர் கருவி அகற்றப் பட்டு அது பண்டாரநாயக்க விமானநிலையத்தில் பொருத்தப்பட்டுள்ளது என விமானநிலையத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

மத்தள விமானநிலை யத்தில்பல்வேறுபகுதிகளில் ஆறு ஸ்கேனர் கருவிகள் பொருத்தப்பட்டிருந்த நிலை யில் அவற்றில் மூன்று ஏற்கனவே, அகற்றப்பட் டுள்ளன என்றும்நான்காவ தாக மற்றுமொரு கருவி அகற்றப்பட்டுள்ளது என வும் குறிப்பிடப்படுகின்றது.

பாதுகாப்புஸ்கேனர் கரு விகள் இவ்வாறு அகற்றப் படுகின்றமைவிமானநிலை யத்தின் பாதுகாப்புக் குறித்த அச்சுறுத்தலை அதிகரித் துள்ளது என விமான நிலைய ஊழியர்கள் தெரி வித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

## மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம் ஜூலை 14

சைவ பரிபாலன சபையால் வழமை போல் நடத்தும் 5 சைவ நாயன்மார்கள் குருபூசைகள் வரிசையில் ஆனி மாத மக நட் சத்திரத்தன்று ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகளின் குருபூசை சைவபரிபாலன சபையாரது நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலையில் நடைபெறும். (இ)

## மின்தடை

யாழ்ப்பாணம்,ஜூலை 14

உயர் அழுத்த தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற் றுக்கிழமை காலை 8 மணியிலி ருந்து மாலை 6 மணி வரை–

**யாழ் மாவட்டம் முழுவதும் கிளி நொச்சி மாவட்டம் முழுவதும், முல்லைத்தீவு மாவட்டம் முழுவதும், வவுனியா மாவட்டம் முழுவதும், மன்னார் மாவட்டம் முழுவதும்**

மின் விநியோகம் தடைப்பட்டிருக் கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகளால் அதிகளவான விபத்துக்கள் ஏற்படுகின்றன!

திருகோணமலை, ஜுலை 14

கிண்ணியா நகரசபை எல்லைக்கு உட்பட்ட பிரதான வீதிகளில் தொடர்ந்தும் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டத்தால் அதிகளவான விபத்துக்கள் ஏற்படுகின்றன என பாதசாரிகள் தெரிவிக்கின்றனர்.

கிண்ணியா – புஹாரி சந்தி தொடக்கம் பிரதான வீதியான டீ சந்தி வரையில் இரவு மற்றும் பகல் நேரங்களில் கட்டாக்காலி



மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளன என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் கூறுகையில் –

இரவு நேரங்களில் போதிய மின் வெளிச்சமின்மையால் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. கடந்த பல மாதங்களாக இந்த விடயம் தொடர்பில் தொடர்ச்சியாக உரியவர்களுக்கு அறிவித்தும் இன்றுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதேவேளை, கட்டாக்காலி மாடுகள் நடுவீதியால் இரவு மற்றும் பகல் நேரங்களில் உலாவுகின்றன. இதனால், வாகனங்களை செலுத்துவதில் வாகன சாரதிகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்த கிண்ணியா நகரசபை முன்வரவேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகிறது.

## தினசரி ராசி பலன் (14.07.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆனித்திங்கள் 30 ஆம் நாள் சனிக்கிழமை துவிதீயைத்திதி இரவு 12.55 மணி வரை பின்னர் திரிதீயை. நட்சத்திரம்: பூசம் மாலை 4.06 வரை பின்னர் ஆயிலியம். சித்தயோகம் மாலை 4.06 வரை பின்னர் அசுப யோகம்.

**ராகுகாலம்** - காலை 9.07 மணி முதல் 10.41 மணி வரை.
**சுபநேரம்** - மாலை 3.01 மணி முதல் 4.31 மணி வரை.
**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆனி மாத வளர்பிறை துவிதீயை.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - பூசம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** சஞ்சலமான நாள். வருமானம் குறையும். செலவு சற்று கூடுதலாக அமையும். பெரியவர்களால் சிற்சில சிரமங்கள் இருக்கும். பணம் கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

**ரிஷபம்** மத்திமமான நாள். பொருள் வரவு சுமாராக இருக்கும். கடின உழைப்புடன், அலைச்சல்கள் அதிகமாகும். காரியத் தடை ஏற்படும். சகோதர உறவில் விரிசல், மனஸ்தாபம் காணப்படும்.

**மிதுனம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். பொருள்கள் அணிமணிகள் சேரும். குடும்பத்தவர்கள் பொதுவில் ஒத்துழைப்பார்கள். வீடு, வாகன யோகம் உண்டாகும். செல்வாக்கு கூடும்.

**கடகம்** நன்மையான நாள். வருமானம் வளமாக இருக்கும். சிலருக்கு சமூக அந்தஸ்து கூடும். வேலை தேடுவோருக்கு நல்ல வேலை கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு நல்ல முன்னேற்றமும், மேன்மையும் ஏற்படும்.

**சிம்மம்** கவலையான நாள். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். சிறு விபத்து அல்லது பொருள் இழப்பைச் சந்திக்க நேரும். தொழிலில் புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளால் கவலை ஏற்படும்.

**கன்னி** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். செயல்களில் வெற்றி ஏற்படும். தடை, தாமதம் விலகி காரியம் கைகூடும். உடன் பிறந்தோர் நண்பர்கள் உதவியாக இருப்பார்கள்.

**துலாம்** மத்திமமான நாள். பணவரவு சுமாராக இருக்கும். உடல் நலனில் கவனம் தேவை. குடும்ப அமைதி சீராக இருக்கும். சுபச் செலவுகள் உண்டாகும். வியாபாரம் மந்த நிலை உண்டாகும்.

**விருச்சிகம்** ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். தந்தைக்கு சிறப்பான பயன்கள் அமையும். ஆன்மிக ஈடுபாடு பெருகும். ஸ்தல யாத்திரை செல்ல நேரிடும். புதிய தொழில் முயற்சிகள் வெற்றியைத் தரும்.

**தனுசு** தீமையான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். சிலருக்கு கடன் சுமை அதிகரிக்கும். பயணங்களால் வீண் செலவுகள் உண்டாகும்.

**மகரம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். அதற்குச் சமமாக செலவுகளும் இருக்கும். சகோதர வழியில் முன்னேற்றம் ஏற்பட்டு, உறவு சீரடையும். சில தடை, தாமதங்களைச் சந்திக்க நேரும்.

**கும்பம்** நன்மையான நாள். நிதிநிலைமை வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உடலாரோக்கியம் மேம்படும். குடும்பத்தில் சுப காரிய நிகழ்வுகள் நடக்கும். சகோதர உறவு பலப்படும்.

**மீனம்** மேன்மையான நாள். குடும்பத்தில் நல்லுறவு வளரும். திருமணமாகாதவர்களுக்கு மண வாழ்க்கை கூடி மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு புதிய வேலை எதிர்பார்த்த படி கிடைக்கும்.

**சந்திராஷ்டம நாள்; மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

## புகலிடம் கோரியுள்ள இலங்கை தமிழ் இளைஞனுக்கு பிரித்தானிய பல்கலைக்கழத்தில் கற்பதற்கான சந்தர்ப்பம்

கொழும்பு, ஜுலை 14

பிரித்தானியாவில் புகலிடம் கோரியுள்ள இலங்கை தமிழ் இளைஞனுக்கு இருவிதமான அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது என அந்த நாட்டு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கை தமிழ் புகலிட கோரிக்கையாளருக்கு பிரித்தானிய பல்கலைக்கழகத்தில் கற்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ஜனஹன் சிவனந்தன் என்ற இலங்கை தமிழ் இளைஞனுக்கே இந்த சந்தர்ப்பம் கிடைத்தது.

ஜனஹனின் குடும்பத்தினருக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்ட நிலையில், அவர் தனது 17 ஆவது வயதில் லண்டனுக்குச் சென்றுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்கள் ஜனஹன்கார் தயாரிக்கும் இடத்திலேயே தங்கியிருந்துள்ளார். அவர் தற்கொலை செய்ய முயற்சித்து அதிகாரிகளினால் காப்பாற்றப்பட்டார்.

இதனையடுத்து limboவில் வீட்டு காவலில் இருந்த நிலையில், அகதி அந்தஸ்தை அடைவதற்கு தீவிரமாக முயற்சித்துள்ளார். கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் வழக்கறிஞராகும் நோக்கத்தில் கல்வி கற்றார். எனினும் கற்கையை நிறைவு செய்வதற்கு அவருக்கு அகதி அந்தஸ்து கிடைக்கவில்லை.

ஜனஹனின் கதை உண்மையாக இருந்த போதிலும், இது பிரித்தானியாவில் ஒரு சாதாரணமான விடயம். புகலிடம் கோருவோர் பெரும்பாலும் அகதி அந்தஸ்தை இலகுவாக பெற்றுக் கொள்ள முடிவதில்லை. சிலருக்கு பல வருடங்கள் போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஜனஹனின் புகலிட கோரிக்கை தெளிவாக உள்ளது. எனினும் அவரது புகலிட கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. தற்போது என்ன செய்வதென தெரியாமல் இருந்த நிலையில் வீடற்ற நிலையிலேயே வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில் ஜனஹனுக்கு இரண்டு அதிர்ஷ்டங்கள் கிடைத்துள்ளன. அவருக்கு அறை ஒன்றில் தங்கியிருக்க அனுமதி கிடைத்துள்ளது. இலங்கையர் ஒருவரினால் இவ்வாறு அறை பகிரப்பட்டுள்ளது.

அத்துடன், கெம்பாஸ் திட்டம் ஒன்றிலும் அவர் அறிமுகப்படுத்தப்பட்டார். அவருக்கு அகதி அந்தஸ்து இல்லாத நிலையில் பல்கலைக்கழக கல்வி தொடங்குவதற்கான வாய்ப்பும் கிடைத்துள்ளது.

லண்டன் பல்கலைக்கழகத்தினால் முன்னெடுக்கப்படும் இந்த கெம்பாஸ் திட்டத்தில் இணைந்து கற்பதற்கு 20 அகதிகளுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய கல்வித் தராதரங்களை ஏற்படுத்துதல் அவசியம்: பிரதமர்


கல்வித் துறையின் வசதிகளை மேம்படுத்தி தராதரங்களை விருத்தி செய்வதற்காக புதிய சட்ட திட்டங்கள் அறிமுகம் செய்யப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சுபக புலமைப் பரிசில் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளும் ஆற்றல் உடைய ஆயிரம் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படுவதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதா கிருஷ்ணன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## விபத்துக் காரணமாக பிரதான வீதியூடான போக்குவரத்து இரு மணி நேரம் தடை



திருகோணமலை – ஹொரவபொத்தானை பிரதான வீதியின் நொச்சிக்குளம் பகுதியில் மரக் குற்றிகளை ஏற்றி சென்ற லொறியொன்று நேற்றுக் காலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

சிமெந்து தொழிற்சாலைக்கு மரக்குற்றிகளை ஏற்றிச்சென்ற லொறியின் முன் டயரில் காற்று போனதால் விபத்து ஏற்பட்டுள்ளது என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

விபத்தினால் லொறி நடுவீதியில் புரண்டு கிடந்த நிலையில் இரண்டு மணித்தியாலங்கள் வரை இந்தப் பிரதான வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டிருந்தது என தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில், விபத்து தொடர்பில் மொறவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## களுகங்கை நீரை வெளிப்பாய்ச்சும் விசேட நிகழ்வில் ஜனாதிபதி!

களுகங்கை நீர்த்தேக்கத்திலிருந்து நீரை வெளிப் பாய்ச்சும் விசேட நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் இறுதிக் கட்டமான மொரகஹகந்த செயற்றிட்டத்தின் ஐந்து நீர்த் தேக்கங்களின் இறுதி நீர்த்தேக்கமான களுகங்கை நீர்த்தேக்கத்திலிருந்தே இந்த நீர் பாய்ச்சப்படவுள்ளது.

இலங்கையில் அண்மைக் காலமாக நிர்மாணிக்கப்பட்ட நீர்ப்பாசன கட்டமைப்புக்களில் மிகப் பெரிய நீர்த்தேக்கமாக களுகங்கை நீர்த்தேக்கம் அமைந்துள்ளது. இதன் மூலம் 84 ஆயிரத்திற்கும் அதிக ஹெக்டெயர் பயிர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி வழங்கப்படவுள்ளது. நீர்பாய்ச்சப்படும் நிகழ்வுக்கு முன்பாக இந்த நீர்த்தேக்கத்தை பொதுமக்கள் பார்வையிட முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## க.பொ.த உயர்தர யாழ். இந்து மாணவருக்கான அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம், ஜுலை 14

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி க.பொ.த (உ.தி) –2018 மாணவர்களுக்கான அனுமதி அட்டை எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி சிவஞான வைரவர் ஆலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது. அதற்கு முன்னர் மாணவர்கள் அலுவலகத்தில் தங்களது அனுமதி அட்டைகளை சரிபார்த்து உறுதிப்படுத்துமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (இ

# நிலையான அபிவிருத்தி இலக்கை பூர்த்தி செய்வதில் அனைத்து தரப்பினருக்கும் சமமான பொறுப்புண்டு

## சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 14

நிலையான அபிவிருத்தி இலக்கை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் போது அனைவருக்கும் ஒரே மாதிரியான பொறுப்புள்ளது. இதற்காக சிவில் சமூக அமைப்புகள், நிபுணர்கள், வணிக சமூகம் மற்றும் சர்வதேச அபிவிருத்தி நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற கட்டட தொகுதியில் கடந்த புதன் கிழமை ஆரம்பமான தெற்காசிய நாடுகளின் சபாநாயகர்களின் மூன்றாவது வருடாந்த மாநாட்டு நிகழ்வில் கலந்துகொண்டு வரவேற்புரையை நிகழ்த்தியபோதே சபாநாயகர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.


இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

ஆசிய மற்றும் பசுபிக் வலயத்தின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு வருடத்திற்கு றில்லியன் அமெரிக்க டொலர் தேவை என ஆசிய அபிவிருத்தி வங்கி மதிப்பீடு செய்துள்ளது.

இருப்பினும் இந்த பிராந்திய நாடுகளுக்காக வழங்கப்படும் அபிவிருத்தி நிதி 30 பில்லியன் அமெரிக்க டொலர் மாத்திரமே என்று சுட்டிக்காட்டினார். அதனால் எமது பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் வளங்களை அபிவிருத்தி செய்வது முக்கியமாகும்.

மக்கள் பிரதிநிதிகள் என்ற ரீதியில் எமது பொறுப்பானது வரவு செலவு திட்டத்தின்போதுசெயற்திறனுடனும், ஒழுங்கு முறையுடனும் முன்னெடுப்பது முக்கியமானதாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சரும பூச்சுக்கள் தொடர்பில் பரிசோதனை நடவடிக்கை



கொழும்பு, ஜூலை 14

பெண்கள் குறுகிய காலத்திற்குள் சருமத்தை அழகுபடுத்துவதற்காக பயன்படுத்தப்படும் பூச்சுக்கள் தொடர்பில் தொடர்ந்தும் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை சமீபத்தில் மேற்கொண்ட இது தொடர்பான முற்றுகையின் போது கைப்பற்றப்பட்ட மூன்று வகையான கிறீம்கள் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திடம் பரிசோதனைக்காக சமர்ப்பிக்கப்பட்டு அறிக்கையும் பெற்றுள்ளது.

இந்த அறிக்கைக்கு அமைவாக இந்த கிறீம்களில் அடங்கியுள்ள இரசாயனத்தின் அளவு குறிப்பிடத்தக்க அளவிலும் பார்க்க அதிகளவில் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மலிக்கா பியூட்டி கிறீம், கோல்டன் லைஃப் பியூட்டி கிறீம். பின்ஸ் பப்பாயா அன்ட் அலோ வேரா மற்றும் நுஹாவையிட் பியூட்டி கிறீம் ஆகிய கிறீம் வகைகளை விற்பனை செய்த வர்த்தகர்கள் கங்கொடவில நீதிவான் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர். இவர்களுக்கு 75 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் எச்சரிக்கையும் செய்யப்பட்டுள்ளது.

# மேல் மாகாண சபை கட்டடத் தொகுதி; திறந்து வைத்தார் ஜனாதிபதி மைத்திரி



கொழும்பு, ஜூலை 14


பத்தரமுல்லை டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மேல் மாகாண சபையின் புதிய கட்டடத் தொகுதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

மகா சங்கத்தினரின் பிரித் பாராயணத்திற்கு மத்தியில் புதிய கட்டடத்தை திறந்து வைத்த ஜனாதிபதி அந்தக் கட்டடத்தின் 13 ஆவது மாடியில் இடம்பெற்ற புதிய சபை அமர்வுக்கு தலைமை வகித்து அதனை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

மேல் மாகாண சபையின் அனைத்து அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களை ஒரே கட்டடத்தின் கீழ் கொண்டுவந்து விரிவாகவும் வினைத்திறன்மிக்க வகையிலும் மக்கள் சேவையை வழங்கும் நோக்குடன் அனைத்து வசதிகளையும் கொண்டதாக நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் இந்தப் புதிய கட்டடத்தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

# போதை பொருளுடன் ஹற்றனில் ஒருவர் கைது





ஹற்றன், ஜூலை 14

ஹற்றனில் ஹெரோயின் போதை பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து ஹற்றன் நோக்கி சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றில் நபர் ஒருவரை சோதனை செய்த போது அந்த நபரிடமிருந்து ஆறு சிறிய பக்கட் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளன.

மிகவும் சூட்சுமமான முறையில் உடம்பில் மறைத்து வைத்து கொண்டு வந்த போது ஹற்றன் மல்லியப்பு சந்தியில் மேற்படி பஸ்ஸை சோதனையிட்டபோது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர் பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை பத்தனைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை ஹற்றன் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரதேச செயலக அலுவலகங்களுக்காக புதிய கட்டடங்கள்

கொழும்பு, ஜூலை 14

களுத்துறை மாவட்டத்தின் வலல்லாவிட்ட, மதுராவெல பிரதேச செயலக அலுவலகங்களுக்காக புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இந்த நிர்மாணப் பணிகள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தலைமையில் நேற்று ஆரம்பமாகின . இந்தப் பணிகளுக்கான நிதியுதவிகளை பொது நிர்வாக அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

பிரதேச ஆட்சி நிர்வாகத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன் கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. இவற்றில் முழுமையான கேட்போர் கூடங்களும் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கத்திக் குத்து சம்பவத்தில் 2 பேர் காயம்: 4 பேர் கைது



லிந்துல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுக்கலை பகுதியில் கத்திக்குத்து சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

லிந்துல மட்டுக்கலை தோட்டத்தின் லெந்தோமஸ் பிரிவில் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் படுகாயமடைந்த இருவர் லிந்துல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதில் ஒருவர் நேற்று முன்தினம் அதிகாலை மேலதிக சிகிச்சைகளுக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கத்திக்குத்து சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 4 பேர் லிந்துல பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தமிழ்த் தலைமைகளின் அரசியல் தடுமாற்றம்

# விக்கியின் முடிவும்

# தமிழ் மக்களின் எதிர்காலமும்

- நரேன் -



இலங்கைத் தீவு பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடம் இருந்து சுதந்திரம் பெறுவதற்கு முன்பிருந்தே தமிழ் தேசிய இனம் தமது உரிமைக்காகவும், நீதிக்காகவும் போராடி வருகிறது.

அந்தப் போராட்டம் ஒரு ஜனநாயகப் போராட்டமாக உருவெடுத்த நிலையில் அந்த மக்களின் ஜனநாயக கோரிக்கைகளை தென்னிலங்கை கண்டு கொள்ளாததன் விளைவாக அது ஆயுதம் தாங்கிய ஒரு தற்காப்பு யுத்தமாக மாற்றமடைந்தது.

அந்த ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் மக்களின் உரிமை அரசியல், சலுகை அரசியலாக திரிபடைந்து உள்ளது என்று அரசியல் அவதானிகள் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஒரு தீர்வுக்காக, இலட்சியத்திற்காக, கொள்கைக்காக, நீதிக்காக தமிழ் தேசிய இனம் சுமார் ஒரு தசாப்த காலமாக போராடி வருகிறது.

இந்தப் போராட்டங்கள் அகிம்சை ரீதியிலும், ஆயுத ரீதியிலும் இடம்பெற்ற போது தமிழ் மக்கள் சலுகைகளுக்காக சோரம் போகாது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதில் உறுதியுடன் இருந்தனர்.

அன்றைய மிதவாத தலைமை தமிழ் ஈழத்தை தேர்தலுக்கான கோசமாக வைத்த போதிலும் மக்கள் தமது நிலைப்பாட்டில் தேர்தலுக்கு அப்பால் சென்றும் ஏற்றுக் கொண்டனர்.

இதன் விளைவாகவே ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் தோன்றின. இளைஞர்களின் அரசியல் அறிவைப் பற்றியோ அல்லது அவர்களது தலைமைத்துவத்தின் திறமை பற்றியோ சிந்திக்காமல் தங்களுடைய இலட்சியத்திற்காக குரல் கொடுக்கும் அமைப்புக்களின் பின்னால் சென்றிருந்தனர்.

### தரம் தாழ்ந்து போயுள்ள தமிழ்த் தலைமைகள்

ஆனால் 2009 இற்கு பின்னரான கடந்த 9 ஆண்டுகளின் தமிழ் அரசியல் தன்மையை அவதானிக்கின்றபோது அந்தப்பேரம்பேசும்சக்தி குறைவடைந்து, கிடைப்பதைப் பெறுவோம் என்கின்ற நிலையில் கூட இல்லாமல் அரசாங்கத்துடன் ஒட்டியிருந்து தமது பதவிகளை தக்க வைத்துக் கொள்ளும் குறுகிய நிலைக்கு தலைமைகள் தரம் தாழ்ந்து விட்டனர் என்றே தெரிகிறது.

அதனை வெளிப்படுத்தும் விதமாகவே கூட்டமைப்பு தலைமையினதும் தமிழரசுக் கட்சியினதும் செயற்பாடுகளும் அமைந்திருக்கின்றன.

அவர்களது இந்தச் செயல், ஆட்சி மாற்றத்தின் பின்னரான அரசாங்கத்தின் சர்வதேச நகர்வுகள் தமிழ் மக்களுக்கு சர்வதேச ரீதியில் இருந்த உதவிக் கரத்தை கூட வலுவிழக்கச் செய்திருக்கிறது.

இந்த நிலையிலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கு எதிராக மக்களது அபிலாசைகளையும், தமிழ் தேசியத் இனத்தின் கோரிக்கைகளையும் தொடர்ந்தும் வலியுறுத்தி அதற்காக உழைக்கக் கூடிய மாற்றுத் தலைமை பற்றிய சிந்தனைகள் வலுவாக எழுந்திருக்கின்றன.

இந்த நிலையை அவதானிக்கின்ற போது, 1976 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பின்னர் அன்றைய தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி அரசாங்கத்துடன் ஓர் இரகசிய உடன்படிக்கையைச் செய்து கொண்டு மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலில் போட்டியிட முனைந்ததையும் அதற்கு அன்றைய இளைஞர் சமுதாயம் எதிர்ப்பு தெரிவித்தமையையும், அதன் பின்னர் ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் உருவாகுவதற்கு வழி வகுத்தமையையும் நினைவுபடுத்துகிறது.

அன்றைய சூழலில் மிதவாத தலைமைகள் செய்த தவறை தட்டிக் கேட்பதற்கு ஓர் இளைஞர் சமுதாயம் தயாராக இருந்தது.

ஆனால் இன்று இருக்கின்ற தமிழ் தலைமையை சவால்களுக்கு உட்படுத்தும் காத்திரமான மாற்றுத் தலைமைக்கான தேவை இருக்கின்ற போதிலும் அந்த இடம் இன்னமும் வெற்றிடமாகவே இருக்கிறது.

2015 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்ற போது தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு சவாலான ஒரு மாற்றுத் அணியாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியையும் (தமிழ் தேசிய மக்கள் முன்னணி) அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தையும் சிலர் கருதினர்.

குறிப்பாக புலம்பெயர் வாழ் தமிழ் அமைப்புக்கள் அவ்வாறு கருதி செயற்பட்டும் இருந்தன.



ஆனால் அவ்வாறான ஒரு மாற்று அணியாக வருவதற்கு கஜேந்திரகுமாருக்குச் சந்தர்ப்பங்கள் கிட்டியிருந்தும் அவர் அதனைச் சரியாக பயன்படுத்திக் கொள்ளவில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீது அதிருப்தி கொண்ட மக்களையும், புலம்பெயர் அமைக்களையும் ஒன்று திரட்டி தனது கட்சியை மக்கள் மட்டத்தில் கொண்டு செல்வதற்கு கஜேந்திரகுமாரும் அவரது கட்சியினரும் தவறியிருந்தனர்.

அதனால் அவரால் ஓர் ஆசனத்தைக் கூட பெற முடியாத நிலமை ஏற்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலைக் காட்டிலும் 2015 இல் அவர் பெற்ற வாக்குகள் அதிகரித்திருந்தாலும் அவரது கட்சி செயற்பாடுகளின் பலவீனமே அவர்களின் தோல்விக்கு காரணமாக அமைந்திருந்தது.

வெறும் அறிக்கைகளுடன் மட்டும் உடன் நில்லாது கட்சி அரசியலை மக்கள் மயப்படுத்த வேண்டிய அவசியத்தை அது உணர்த்தியிருக்கிறது. மறுபுறம் சர்வதேச விசாரணை, தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு ஆகியவற்றை தேர்தல் அறிக்கையாக முன்வைத்து இதற்கு தமிழ் மக்கள் ஒற்றுமையாக உள்ள தலைமைக்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்கவும், மக்களின் ஆணை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்தால் மட்டுமே இதனை செய்ய முடியும் என்றும் தமிழ் தேசியக் கூட்ட மைப்பு தேர்தல் மேடைகளில் வலியுறுத்தி வந்தது.

### கூட்டமைப்புக்கு ஆதரவு

இதனை மக்களும் ஏற்றுக்கொண்டு ஏனையவர்களை ஒதுக்கித் தள்ளி கூட்டமைப்புக்கு அமோக ஆதரவளித்திருந்தனர்.

இதன் பயனாக கூட்டமைப்பிற்கு 16 ஆசனங்கள் கிடைத்திருந்தன. ஆனால் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் இந்த நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

கூட்டமைப்புக்கு சரிவைக் கொடுத்துள்ள அதேவேளை, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பி என்பவற்றுக்கு ஏறுமுகத்தை காட்டியிருக்கிறது.

ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியும் கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய போதும் குறிப்பிட்டளவு ஆசனங்களை தம்வசப்படுத்தி இருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

நாடாளுமன்றத்தில் உள்ள 16 ஆசனங்களையும், மாகாண சபை உறுப்பினர்களையும், வடக்கு – கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களையும் வைத்துக் கொண்டு ஒரு காத்திரமான பேரம் பேசும் சக்தியாக திகழ வேண்டிய கூட்டமைப்பு சலுகைகளை தக்க வைத்துக் கொள்வதற்காக அனைத்து அரசியல் உரிமைகளையும் விட்டுக் கொடுக்கும் நிலைக்குச் சென்றுள்ளது.

இத்தகைய பின்னணியில் தான் வட மாகாண முதலமைச்சர் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை கையில் எடுத்துக் கொண்டுள்ளார்.

அவர் கையில் எடுத்துக் கொண்டார் என்று சொல்வதை விட அவர் ஒரு நீதியரசராக இருந்ததன் விளைவாக அந்த தேர்தல் விஞ்ஞாபனத்திற்காக உழைக்க வேண்டிய நிர்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளார் என்பதே உண்மை.




(09 ஆம் பக்கம் பார்க்க)





கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலு வுள்ளோர் சங்கத்தின் புதிய கட்டடம் கடந்த வியாழனன்று வடக்கு மாகாண முதலமைச்சரினால் திறந்து வைக் கப்பட்டது.

மாகாண சபை உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று வடக்கு முதல மைச்சரினால் ஒதுக்கப்பட்ட விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான வை. தவநாதன், அ.பசுபதிபிள்ளை ஆகியோர் தலா 20 இலட்சம் ரூபாவும், ப. அரியரத்தினம் இரண்டு இலட்சம் ரூபாவுமாக 42 இலட்சம் ரூபாவுக்கு கிளிநொச்சி டிப் போச் சந்திக்கருகில் அமைக்கப்பட்ட புதிய கட்டடமே திறந்துவைக்கப் பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சமூக சேவைகள் மக ளிர் விவகார அமைச்சர் அனந்தி சசி தரன், மாகாண சபை உறுப்பினர்க ளான தவநாதன், பசுபதிபிள்ளை, பிர தேச சபை உறுப்பினர்களான ரஜனி காந், சிவநேசன், சரோஜாதேவி, மற் றும் மாகாண, மாவட்ட, பிரதேச சமூக சேவைகள் பணிப்பாளர்கள், மாற்றுத்தி றனாளிகள் என பலர் கலந்துகொண் டனர்.

(இ)





முல்லைத்தீவு மாவட்டத்தில் கரை துறைப் பற்று பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட இரண்டு மாதர் கிராம அபிவி ருத்தி சங்களிற்கு கணினி மற்றும் மல்ரிமீடியா உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

பெரெண்டினா அபிவிருத்தி சேவை கள் ஊடாக மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் கோரிக்கைக்கு அமை வாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கரை துறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக் குப்பட்ட கோவில்குடியிருப்பு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு மல்ரி மீடியா தொகுதியும் கள்ளப்பாடு தெற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு கணனித் தொகுதியும் அன்பளிப்பு செய்யப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட கிராம அபி விருத்தி திணைக்கள அலுவலகத்தில் முல்லைத்தீவு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மாலினி பாஸ்கரனின் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் பெரெண்டினா நிறுவன முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளர் சி சிவஞான சேகரன், புதுக்குடியிருப்பு பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.மதுரா, ஒட்டுசுட்டான் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.வக்சினி, கரைதுறைப் பற்று பிரதேச கிராம அபிவிருத்தி உத்தி யோகத்தர் திருமதி விஜயகுமாரி இளங்கோ, மாந்தைகிழக்கு பிரதேச கிராம அபிவி ருத்தி உத்தியோகத்தர் ஆ நியிதா மற் றும் கிராம அமைப்புகளின் பிரதிநிதி கள் உள்ளிட்டோர் கலந்துகொண்ட னர்.

(இ - 81)

# தமிழ்த் தலைமைகளின்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர் 2013 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னர் இருந்த நிலைப்பாட்டிற் கும் 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத் திற்கு பின்னர் இருக்கின்ற நிலைப்பாட் டுக்கும் இடையில் நிறைய வேறுபாடு களை அவதானிக்க முடிகிறது.

முன்னாள் நீதியரசர் என்ற பெயரோடு அரசியலுக்கு வந்த இவர் ஆரம்பத்தில் அரசாங்கத்திற்கு நல்லெண்ண சமிக் ஞை களைக் காட்டியிருந்தார். சம்பந் தன்- சுமந்திரன் தரப்போடு ஒட்டிப் போகக் கூடிய ஒருவராகத் தென்பட்டி ருந்தார்.

ஆனால், 2015 இற்கு பிறகு நிலைமை மாறியது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமையின் செயற் பாடுகளுக் கும் இவரது செயற்பாடுக ளுக்கும் இடையில் அதிக வேறுபாட் டையே காணமுடிகிறது.

வடமாகாண சபையில் இனப்படு கொலை தீர்மானத்தை நிறைவேற்றி இவரும் தீவிர தமிழ் தேசிய அரசியல் வாதியாக மாற்றம் பெற்று இன்று வரை அவ்வாறனதொருவராகவே மக்களா லும் பார்க்கப்பட்டு வருகிறார்.

சம்மந்தன் தரப்பை சரி எனக் கூறுப வர்கள் இவரது செயற்பாட்டை பிழை என வாதிடுகின்றனர்.

இது அவரவர் சார்ந்திருக்கும் கருத் தியல் நிலைப்பாட்டின் அடிப்படையில் சரியானதே. ஆனாலும் தமிழ் மக்க ளைப் பொறுத்தவரை தற்போது சம்பந் தன் மீதான ஈர்ப்பு என்பது குறைந்து வருவதையும், முதலமைச்சர் மீதான ஈர்ப்பு அதிகரித்து வருவதையும் அவதா னிக்க முடிகிறது. தமிழ் மக்களின் அபி லாசைகளையும், கோரிக்கைகளையும் அவர் தன்னை சந்திக்க வருகின்ற இராஜதந்திரிகளுக்கும், பிரதிநிதிகளுக் கும் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின் றார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை மீதான அதிருப்திகள் அதி கரித்த நிலையிலேயே தமிழ் மக்கள் பேரவை உருவாகியிருந்தது.




அதன் இணைத்தலைவராக வட மாகாண முதலமைச்சர் இணைந்து கொண்டமை ஒரு மாற்றுத் தலைமை பற்றிய சிந்தனையை வலுப்படுத்தியது. ஆனால் அரசியலுக்கு அப்பால் ஒரு மக்கள் இயக்கமாக தன்னை காண்பித்த தமிழ் மக்கள் பேரவை தமிழ் மக்களின் அபிலாசைகளை முன்னிறுத்திய ஓர் அழுத்தக்குழுவாக செயற்படமுனைந்தது.

அரசமைப்பு சீர்திருத்த சட்டவரைபு ஒன்றை தயாரித்து கையளித்ததுடன், வடக்கிலும், கிழக்கிலும் ஆக இரண்டு எழுகத் தமிழ் பேரணியுடனும் பேரவை அமைதியாகிவிட்டது.

### மீண்டும் கையறுத்த நிலையில் தமிழர்கள்

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலை மையின் எதிர்ப்பையும் மீறி தமிழ் மக் கள் பேரவையின் செயற்பாடுகளுக்கு ஆதரவு கொடுத்த மக்கள் இன்று மீண் டும் கையறுந்த நிலையில் மேய்ப்பார் அற்ற மந்தைக் கூட்டங்கள் போல் இருக் கின்றார்கள்.

கூட்டமைப்பு தலைமை மீதான வெறுப் பையுடையவர்கள் பேரவைக்கு அதிக ஆதவை வழங்கியிருந்தனர். ஒரு மக்கள் அமைப்பு எனக் காண்பித்த பேரவை தம்மை நம்பிய மக்களுக்கு சரியான ஓர் அரசியல் தலைமையை காட்டத் தவறியிருக்கிறது.

பாதிக்கப்பட்ட மக்கள் தமது பிரச் சினை களுக்கு தீர்வைப் பெறுவதற்கு தாமாகவே வீதியில் இறங்கி 450 நாள் களுக்கு மேலாகப் போராடி வருகின்ற னர்.

அத்தகைய மக்கள் போராட்டங் களை ஒன்றுபடுத்தி அந்த மக்கள் போராட்டங்களை வலுப்படுத்தி அந்த மக்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற் படுத்த கூட்டமைப்பு மட்டுமல்ல பேரவை யும் தவறியிருக்கின்றது.

மக்கள் இயக்கமாக தன்னைக் காட் டும் பேரவை அந்த மக்கள் போராட்டங் களுக்கு கூட தார்மீக ரீதியில் தலைமை கொடுக்கத் தவறியிருக்கிறது. இந்த நிலையிலேயே தமிழ் தேசிய அரசியல் நகர்ந்து கொண்டிருக்கிறது. இதனா லேயே புதிய தமிழ் தேசியத் தலைமை ஒன்றுக்கான தேவை உணரப்பட்டி ருக்கிறது.

### விக்கியின் தடுமாற்றம்

பேரவையின் இணைத்தலைவ ரான முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூட மக்களின் அபிமானத்தை பெற்றி ருக்கின்ற போதும் தன்னை நம்பிய மக்களுக்கான தலைமையை வழங் குவது தொடர்பில் நிதானமாக முடிவெ டுக்க முடியாது தடுமாறுவதாகவே தெரி கிறது.

பேரவையின் ஆதரவுடன் முதல மைச்சர் புதிய கட்சி அல்லது கூட்டு ஒன்றை உருவாக்குவதற்கான முயற் சிகள் இடம்பெறும் நிலையில், அத்த கைய கூட்டு ஏற்பட்டால் கூட்டமைப் புக்கு பின்னடைவு ஏற்படும் என்பதை உணர்ந்து முதலமைச்சரை மீள கூட்ட மைப்பின் வேட்பாளராக களமிறக்கவும் முயற்சிகள் இடம்பெறுகிறது.

தமிழ் மக்களுக்கு தேவையானது முதலமைச்சர் பதவி அல்ல. தமது அபி லாசைகளையும் உரிமைக் கோரிக்கை ளையும் சோரம் போகாது கொண்டு செல்லக் கூடியதும், அதனை அடைவ தற்கு மக்களை வழிநடத்தக்கூடியது மான ஒரு தலைமையே.

அதனை முதலமைச்சர் உணர வேண் டும். பதவி என்பதற்கு அப்பால் கொள்கை ரீதியாக மக்களது அபிலா சைகளை முன்னெடுக்க கூடிய ஒரு கட் டமைப்பை உருவாக்க அவர் முன்வர வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப் பும்.

இதனை அரசியல் அவதானிகளும் பத்தி எழுத்தாளர்களும் தொடர்ச்சியாக முன்வைத்தும் வருகின்றனர். ஆனால் அத்தகையதொரு தலைமையை வழங் கக் கூடிய நிலையிலோ அல்லது மக்க ளால் எற்றுக் கொள்ளக் கூடிய நிலை யிலோ எவரும் தயாராகவில்லை.

இந்த நிலை நீடிக்கும் வரையில் விமர் சனங்களுக்கு மத்தியிலும் தமிழ் மக்க ளின் தலைமையாக சம்பந்தனே தொடர்ந்தும் நீடிக்கப் போகிறார். ★




# கல்விக் கதிர் வெளியீடு 05

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

பிரபல ஆசிரியர்

### பகுதி – II

06. ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்கின் விலை ரூபாய் 65 ஆகும்.50 கிராம் தேயிலையின் விலை ரூபாய் 40 ஆகும். 2 கிலோகிராம் உருளைக் கிழங்கினதும் 150கிராம் தேயிலையும் வாங்கத் தேவையானபணம் எவ்வளவு?

.............ரூபாய் ............. சதம்

07. பெட்டி ஒன்றினுள் 60 முட்டைகள் இருந்தன. அவற்றில் $\frac{1}{3}$ பங்கு உடைந்திருந்தன எனின் பெட்டியினுள் இருந்த உடையாத முட்டைகளின் எண்ணிக்கை யாது?

..............................................

08. 6m நீளமான கம்பியொன்றிலிருந்து 40 cm வீதம் நீளமுள்ள ஒரே சமனான நான்கு துண்டுகள் வெட்டி நீக்கப்பட்டன. அதன்படி, மீதி யாகவுள்ள கம்பியின் நீளம் யாது?

................m....................... cm

09. "அறுபதாயிரத்து இருநூற்று மூன்று" என்பதை இலக்கத்தில் எழுதுக.

............................

10. 8943 எனும் எண்ணில் இலக்கம் 9 இன் பெறுமானம் யாது?

............................

11. 100000 இற்கு முந்திய எண்ணை எழுதுக. ............................

12. 24 ஐ உரோமன் இலக்கத்தில் எழுதுக. ............................

13. அப்பிள்பழம் ஒன்றின் விலை ரூபாய்28.50 ஆகும். 12 அப்பிள் பழங்களின் விலை யாது?

.........ரூபாய்..........சதம்

14. போத்தல் ஒன்று 1 லீற்றர் 125 மில்லிலீற்றர் நீரைக் கொள்ளும். இவ்வாறான எட்டுப் போத்தல்கள் கொள்ளும் நீரின் கனவளவு யாது?

................l......................ml

15. ஒன்று ரூபாய் 32.50 விலையுள்ள அப்பியாசக் கொப்பிகள் நான்கை வாங்குவதற்கு என்னிடம் ரூபாய் 100.00 உள்ளது. மேலும் எவ்வளவு பணம் தேவைப்படும்?

................ரூபாய்..................சதம்

**16) சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

1 .நீர் பாத்திரமொன்றில் மண்ணெண்ணெயை இட்டால்
1) மண்ணெண்ணெய் நீரின் மீது மிதக்கும்
2) மண்ணெண்ணெயின் மீது நீர் மிதக்கும்
3) மண்ணெண்ணெய் நீருடன் கலக்கும்.
4) மேலுள்ள எல்லா விடைகளும் பிழையானவை


2. உடலின் எலும்பு வளர்ச்சிக்கு அவசியமானது.
1)கல்சியம் 2) இரும்பு 3) அயடீன் 4) உப்பு

3. நீரைச் சுத்தம் செய்யப் பயன்படுத்தும் இரசாயனப் பதார்த்தம்
1) அயடீன் 2) கல்சியம் 3) குளோரின் 4) போமலின்

4. காலை சூரியன் ஒளியிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய உயிர்ச்சத்து வகை
1) உயிர்ச்சத்து A 2) உயிர்ச்சத்து B
3) உயிர்ச்சத்து C 4) உயிர்ச்சத்து D

5. அலுமினியப் பாத்திரங்களில் இடக்கூடாத உணவு வகை
1) அச்சாறு 2) மீன் 3) பருப்பு 4) மரவள்ளி

6.எலுமிச்சைகளில் அடங்கியுள்ள உயிர்ச்சத்து வகை
1) உயிர்ச்சத்து A 2) உயிர்ச்சத்து B
3) உயிர்ச்சத்து C 4) உயிர்ச்சத்து D

7. 
இவ்வுருவில் காட்டப்படும் பறவை
1) பருந்து 2) மழைக்குருவி
3) ஆந்தை 4) மரங்கொத்தி

8. தும்பியின் உருவைக் காட்டுவது.

1) 

2) 

3) 

4) 

9.சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்படுவது.
1) ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி 2) ஒகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி
3) நவம்பர் மாதம் 1 ஆம் திகதி 4) டிசெம்பர் மாதம் 1 ஆம் திகதி

10) 
படத்திலுள்ள தாவரம் குறிப்பது
1. அலரி 2. கொவ்வை
3. முருங்கை 4. கொன்றை

11.கலாவாவியைக் கட்டுவித்த மன்னன்.
1) மகாசேனன் 2) தாதுசேனன்
3) மகா பாராக்கிரமபாகு 4) துட்டகைமுனு மன்னன்

12. கையில் ஒட்டிக்கொண்ட தார் கறையொன்றை கழுவி நீக்க மிக உகந்தது
1) எலுமிச்சம் சாறு 2)சவர்க்காரத் தண்ணீர்
3) வினாகிரி 4) மண்ணெண்ணெய்

13. தாவர வேர்களையும் , தண்டுகளையும் அரிக்கும் பிராணி
1) தேனீ 2) கறையான் 3) மயிர்க்கொட்டி 4) கிளி


14. ஈயினால் பரப்பப்படும் ஒரு நோய்
1) கொள்ளைநோய் 2) யானைக்கால்
3) செங்கண்மாரி 4) கழிச்சல் நோய்

15.ஓட்டினுள் புகுந்து பாதுகாப்புப் பெறும் பிராணி
1)நத்தை , கடலாமை 2) சிலந்தி , மட்டைத்தேள்
3) இறால் , தேள் 4) தேள், அட்டை

16.இலங்கைக்குக் கிழக்கில் அமைந்திருப்பது
1) மலேசியா 2) ஆபிரிக்கா
3) இந்தியா 4) இந்து சமுந்திரம்

17.காற்றின் மூலம் பரம்பலடையும் வித்துக்கள் மாத்திரம் இடம்பெறும் விடை
1) சிறகவரை , ஆடையொட்டி, எருக்கலை
2) சீதேவியார் செங்கழுநீர் , எருக்கலை, எண்ணெய்
3) முருங்கை , காசித்தும்பை, மரமுந்திரிகை
4) எருக்கலை , குன்றிமணி, புலிநகம்

18.சூரிய நமஸ்காரப் பயிற்சியின் மூலம் ஐந்து சந்தர்ப்பங்கள் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் விடை




1) ABCDE 2) CDBEA 3) ADCBE 4) ACDBE

19. தேசப்படங்களில் நதிகளும் பெருந்தெருக்களும் காட்டப்படும் நிறம்
1) கபிலம் , சிவப்பு 2) நீலம் , சிவப்பு
3) நீலம் கறுப்பு 4) சிவப்பு, கறுப்பு

20.குருநாகல் , புத்தளம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணம்
1) கிழக்குமாகாணம் 2) வடமேல்மாகாணம்
3) மேல்மாகாணம் 4) வடமத்திய மாகாணம்

21. இலங்கைத் தேசிய இலச்சினையில் உள்ள அம்சத்தையும் அதனால் குறிக்கப்படும் விடயத்தையும் சரியாகக் காட்டும் விடை
1) நிலைக்கலசம் – நிலைத்திருத்தல்
2) நெற்கதிர் – தன்னிறைவு
3) சூரியசந்திரர் – தார்மீகம்
4) சிங்கம் – சிங்களமக்கள்

22. சிறிய ஒலிகளையும் மிகத் துல்லியமாக கேட்கும் ஆற்றல் உள்ள பிராணி
1) யானை 2) ஓணான் 3) பருந்து 4) முயல்

23. இலங்கைக்கே உரிய தாவரம்
1. தென்னை 2. மாமரம்
3. மாதுளை 4. எண்ணெய் மரம்

24. தாவரத்திற்குப் பூவிலிருந்து கிடைக்கும் பயன்.
1. அழகூட்டல்
2. அதன் இனத்தைப் பரப்ப உதவும்
3. நறுமணத்தைப் பரப்பல்
4. தாவரத்தின் ஆயுட்காலத்தை கூட்டல்

25. மண்ணை வளமாக்க உதவும் விலங்கு
1. மட்டைத்தேள் 2. மண்புழு 3. மரவட்டை 4. அட்டை

# முன்னறிவித்தலின்றி உடைக்கப்பட்டன வீடுகள்; தெஹிவளையில் 20 குடும்பங்கள் நிர்க்கதி

கொழும்பு, ஜூலை 14

நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் தெஹிவளை அத்தப்பத்து டெரஸ் வீதியில் அமைந்திருந்த குடியிருப்புத் தொகுதி மக்களை திடீரென வெளியேறுமாறு பொலிஸார் பணித்து அவர்களது வீடுகள் உடைக்கப்பட்டத்தையடுத்து தாம் வீதிக்கு வந்துள்ளோம் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக தாம் இந்த இடத்தில் வசித்து வருகிறோம் என்றும் வாக்காளர் அட்டை, மின்சாரப்பட்டியல், நீர் கட்டணப் பட்டியல் என்பன இந்த முகவரியிலேயே காணப்படுகின்றன என்றும் அந்த மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த இடத்துக்கான நில வாடகையும் அதன் உரிமையாளருக்குப் பாதிக்கப்பட்ட மக்களால் வழங்கப்பட்டு வந்துள்ளது.

கடந்த 30 வருடங்களுக்கும் மேலாகத் தனியாருக்கு சொந்தமானது எனத் தெரிவித்து இரு தரப்புக்கு இடையில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில் கடந்த புதன்கிழமை நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.



திடீரென முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையால் தாம் நிர்க்கதியாகியுள்ளோம் என்றும் தமக்கான பிறிதொரு இடத்தைப் பெற்றுத்தருமாறும் தமது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய உதவுமாறும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நிர்வாண இளைஞனால் பரபரப்பு!

மொனராகல, கல்கமுவ இரகசியமாக வீட்டிற்குள் நுழைந்து நிர்வாணமாக படுத்திருந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

26 வயதான இளைஞர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார். இந்நபரை எதிர்வரும் 17ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக் குமாறு கல்கமுவ நீதிவான் பிரபாத்ஜயசூரிய உத்தரவிட்டுள்ளார்.

முறைப்பாட்டாளரான பெண் தனது பிள்ளைகளுடன் விகாரைக்கு சென்று அதிகாலை 1.30 மணியளவில் வீடு திரும்பும் போது, இந்த நபர் வீட்டில் நிர்வாணமாக படுத்திருந்துள்ளார். அவர் குடி போதையில் இருந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநபரை பார்த்து பிள்ளைகள் அச்சமடைந்துள்ளனர் என முறைப்பாட்டாளரான பெண் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்று தருவதாக கூறி ஏமாற்றிய பெண் கைது

கொழும்பு, ஜூலை 14

வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி ஏமாற்றிய பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படை சிப்பாயுடன் இணைந்து செய்த இந்த மோசடி மூலம் 80 இலட்சம் ரூபாய் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு புலனாய்வுப் பிரிவின் சிறப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் 20 பேரிடம் சுமார் ஒரு கோடி ரூபா பணம் மோசடி செய்த நிலையில், குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு அருகில் வைத்து பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தோனிசாமி பாக்யராணி என்ற இந்த பெண் இதுவரையில் காஞ்சனா செவ்வந்தி என்ற பெயரில் மோசடி செய்து வந்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் குடியுரிமை பெற்ற கோடீஸ்வர பெண் என தன்னை அடையாளப்படுத்தி, அங்கு தனக்கு சொந்தமான தொழிற்சாலையில் வேலை பெற்று தருவதாக இளைஞர் யுவதிகளிடம் பணம் மோசடி செய்யும் நடவடிக்கையில் அவர் ஈடுபட்டுள்ளார்.

கடந்த வருடம் முதல் அவர் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளார் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் மாத்தறை திக்வெல்ல பிரதேசத்தில் சோதிட நடவடிக்கை மேற்கொள்ளும் தேவாலயத்திற்கு சென்ற இந்த பெண் அங்கு வந்த மக்களின் நம்பிக்கையை வென்று 80 லட்சம் ரூபா பணம் மோசடி செய்துள்ளார்.

இந்த வருடம் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி ஆஸ்திரேலியாவில் பணிக்கு செல்ல ஆயத்தமாகுமாறு கூறி இளைஞர்களை இந்த பெண் ஏமாற்றியுள்ளார் என தெரிய வந்துள்ளது.

# அனுமதி அட்டைகள் பாடசாலைகளுக்கு விரைவில் அனுப்பப்படும்

## பரீட்சை திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 14

க.பொ.த உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்கான அனுமதி அட்டைகள் விரைவில் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் 6ஆ ம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சை மற்றும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள தரம் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்கான அனுமதி அட்டைகளை அடுத்து வரும் இரண்டு நாள்களுக்குள் அனுப்பி வைக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இந்த இரண்டு பரீட்சைகள் சார்ந்த மேலதிக வகுப்புக்களை ஐந்து தினங்களுக்கு முன்னதாக நிறுத்த வேண்டியது அவசியம். இம்முறை க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குரிய வினாத்தாள்களை வாசித்துப் புரிந்துகொள்ள மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக 10 நிமிடம் அவகாசம் வழங்கப்படுமென்றும் ஆணையாளர் நாயகம் பி. சனத் பூஜித்த மேலும் குறிப்பிட்டார்.

(கு)

# 16 எம்.பிக்களும் தங்களின் பின்னடைவை அறியாமல் விமர்சிப்பது வேடிக்கையானது!

தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களும் அரசியலில் தாம் அடைந்துள்ள பின்னடைவை அறியாமல் பிறருக்கு எதிராக கருத்துக்களை தெரிவிப்பது வேடிக்கயான விடயம் என அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாரை தமது தலைவராக தெரிவு செய்ய வேண்டும் என்ற விடயத்தை நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும். சிறுபான்மை மக்களுக்கு துரோகமிழைத்த முன்னாள் பாதுகாப்பு செயலாளரை ஆட்சியில் அமர்த்த வேண்டிய எவ்வித அவசியமும் இல்லை.



அட்மிரல் சரத் வீரசேகர தெரிவிப்பு

அத்துடன்சிறுபான்மைமக்களை பகடைக்காயாக கொண்டு அரசியல் செய்யும் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் எம்.கே. சிவாஜிலங்கம் போன்றோர் தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் எவ்வித அக்கறையும் கொள்ளாது நாட்டை பிளவுபடுத்தவே முயற்சிக்கின்றனர்.

இந்த நிலையில் தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களும் அரசியலில் தாம் அடைந் துள்ள பின்னடைவினை அறியாமல் பிறருக்கு எதிராக கருத்துக்களை தெரிவிப்பதும் பிறரை விமர்சிப்பதும் வேடிக்கயைான விடயமாக காணப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மன்னார் மாவட்டத்தில் எச்.ஐ.வி. பரிசோதனை

மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற எச்.ஐ.வி தொற்று பரிசோதனையின் போது சுமார் 1,600 பேர் தம்மை சோதித்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தேசிய பாலியல் நோய் தடுப்புப் பிரிவு, மன்னார் மாவட்ட சுகாதார திணைக்களத்துடன் இணைந்து பொது இடங்களில் இந்த சோதனையை நடத்தி இருந்தன.

இதில் எச்.ஐ.வி தொற்று உள்ளவர்கள் எவரும் இனங்காணப்படவில்லை என வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்டையில் குழம்பு கொட்டியதால் 2 வைத்தியர்கள் இடையில் மோதல்

காலி, ஜூலை 14

சட்டையில் குழம்பு கொட்டியதால் 2 வைத்தியர்களுக்கு இடையில் கடும் மோதல் இடம்பெற்ற சம்பவமொன்று கராபிட்டிய வைத்தியசாலையில் பதிவாகியுள்ளது.

வைத்தியசாலையின் உணவகத்தில் வைத்தியர் ஒருவர் உணவு உட்கொண்டுவிட்டு எழுந்து சென்ற போது, மேசையில் வைக்கப்பட்டிருந்த குழம்பு, சக மருத்துவர் ஒருவரின் சட்டையில் கொட்டியதனால் இந்த முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளது என தெரியவருகிறது.

காலியில் அமைந்துள்ள பிரபல பாடசாலையொன்றில் ஒரே வகுப்பில் ஒன்றாக கல்வி கற்று, மருத்துவ கல்லூரிக்கும் ஒன்றாகவே தெரிவாகிய நண்பர்களே இவ்வாறு சட்டையில் குழம்பு கொட்டியதற்காக ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டுள்ளனர்.

அவசர சிகிச்சைப் பிரிவு வைத்தியர் ஒருவரும், பல்மருத்துவர் ஒருவரும் இவ்வாறு மோதிக் கொண்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பில் இருவரும் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்தி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சக வைத்தியரினால், தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய சாத்தியம் உண்டு என குறித்த வைத்தியர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்திக் கொண்டுள்ளனர்.

வைத்தியர்கள் ஒருவருக்கு ஒருவர் மரண அச்சுறுத்தல் விடுத்துக் கொண்ட இந்தச் சம்பவம் குறித்து காலிபொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# மயக்கமுற்று விழுந்த இளைஞர் உயிரிழப்பு!

லிந்துலை, ஜூலை 14

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லிப்பக்கலை தோட்டத்தில் தேயிலை பறித்துக் கொண்டிருந்த 26 வயதுடைய ஆணொருவர் மயக்கமுற்று விழுந்தமையையடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என லிந்துலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இந்த நபர் லிப்பகலை தோட்ட தேயிலை செடிகளுக்கு கிருமிநாசினி தெளித்துக் கொண்டிருந்தபோது கிருமிநாசினி துளிகள் காற்றின் மூலம் அவரின் மீது வீசியதால் சுவாசிக்க முடியாத நிலையில் மயங்கி விழுந்துள்ளார்.

இதனையடுத்து சக தொழிலாளர்கள் மூலம் அவர் லிந்துலை வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டு சிகிச்சை வழங்கப் பட்டது. இருப்பினும் அவர் 15 நிமிடங்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ட்ரம்ப் தன்னுடன் செக்ஸ் உறவு வைத்துக்கொண்டார் எனக் கூறிய

# கவர்ச்சி நடிகை 'டேனி' அமெரிக்காவில் கைது



வொஷிங்டன், ஜுலை 14

அமெரிக்காவில் ஆபாச நடிகை ஸ்டார்மி டேனியல்ஸ், நிகழ்ச்சி ஒன்றில் ரசிகர் ஒருவர் ஆபாசம் இல்லாத வகையில் தன்னை தொடுவதற்கு அனுமதி அளித்தமைக்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஆபாச நடிகை ஸ்டார்மி டேனியல்ஸ். இவர், தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தன்னுடன் 2006 ஆம் ஆண்டு செக்ஸ் உறவு வைத்துக்கொண்டார் என பரபரப்பு குற்றம் சாட்டியவர் ஆவார்.

மேலும், ஜனாதிபதி தேர்தலின்போது இந்த விவகாரத்தை வெளியே சொல்லாமல் இருப்பதற்காக தனக்கு ட்ரம்ப்பின் வழக்கறிஞர் மைக்கேல் கோஹன் 1 லட்சத்து 30 ஆயிரம் டொலர் (சுமார் 88 லட்சம் இந்திய ரூபா) தந்தார் என்று கூறி பரபரப்பை ஏற்படுத்தினார்.

இந்த நிலையில், ஓஹியோ மாகாணம், கொலம்பஸ் நகரில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அங்கு அவர் வயது வந்தவர்களுக்கு கவர்ச்சியான நடனங்கள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் உள்ளிட்டவை நடத்தி உற்சாகம் ஏற்படுத்துகிற 'ஸ்ட்ரிப் கிளப்' நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டபோது, மேடைக்கு வந்து தன்னை ஒரு ரசிகர் ஆபாசம் இல்லாத வகையில் தொடுவதற்கு அனுமதி அளித்தார். இதற்காக அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான தகவலை அவரது வழக்கறிஞர் மைக்கேல் அவினாட்டி வெளியிட்டு உள்ளார்.

இது திட்டமிட்ட நாடகம். அரசியல் ரீதியில் வஞ்சம் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை ஆகும். இது பெரும் ஏமாற்றத்தை தந்து உள்ளது. நாங்கள் அனைத்து போலி குற்றச்சாட்டுகளையும் சந்திப்போம் என அவர் டுவிட்டரில் பதிவிட்டு உள்ளார்.

மேலும் ஸ்டார்மி டேனியல்ஸ் பிணையில் விடுவிக்கப்படுவார் என்றும் நம்பிக்கை தெரிவித்து இருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மீது ஸ்டார்மி டேனியல்ஸ் ஏற்கனவே 2 வழக்குகள் தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தெரசா மேயின் பிரெக்சிட் திட்டம் அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தத்தை அழித்துவிடும் என்கிறார் ட்ரம்ப்

பிரிட்டன் பிரதமர் தெரசா மேயின் பிரெக்சிட் திட்டம் அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தத்தை அழித்துவிடும் என ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவது தொடர்பான பிரெக்சிட் நடைமுறைகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. அடுத்த ஆண்டு மார்ச் 29 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுகிறது பிரிட்டன். இதற்கான செயல் திட்டங்களை பிரிட்டன் பிரதமர் தெரசா உருவாக்கி பேச்சு நடத்தி வருகிறார்.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் 4 நாள் பயணமாக பிரிட்டன் சென்றுள்ளார். அவருக்கு ஆக்ஸ்போர்ட்ஷியரில் உள்ள பிளென்ஹீம் அரண்மனையில் சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் பிரிட்டன் பிரதமர் தெரசா மே, ட்ரம்ப் இருவரும் சந்தித்து பேச்சு நடத்தினர். அப்போது அமெரிக்காவுடன் வர்த்தக உறவை விரும்புகிறோம் என தெரசா மே குறிப்பிட்டார்.

இந்த நிலையில், ஒரு பத்திரிகைக்கு ட்ரம்ப் அளித்த பேட்டியில், பிரெக்சிட் பேச்சுகளை பிரிட்டன் பிரதமர் தெரசா மே கையாளும் விதத்தை விமர்சித்தார். பிரிட்டன் பிரதமரின் பிரெக்சிட் செயல்திட்டம், அமெரிக்காவுடன் எதிர்காலத்தில் எந்தவித வர்த்தக ஒப்பந்தத்தையும் மேற்கொள்ள முடியாத அளவுக்கு நம்பிக்கையை சீர்குலைக்கும் எனக் கூறியுள்ளார்.

தற்போதைய திட்டப்படி அவர்கள் ஒப்பந்தம் செய்தால், நாங்கள் பிரிட்டனுடன் ஒப்பந்தம் செய்வதற்கு பதிலாக ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒப்பந்தம் செய்வோம் என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

லண்டனில் இருந்து தாயகம் திரும்பும்

# பாக்.முன்னார் பிரதமர் நவாஸும் அவரது மகளும் கைதாவார்கள்!

இஸ்லாமாபாத், ஜுலை 14

ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்ட பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப், மகள் மரியம் நவாஸையும் கைது செய்யப்பட்டு, அவர்களை அடியலா சிறையில் அடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் பிரதமராக இருந்து வந்த நவாஸ் ஷெரீப், அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்திய 'பனாமா கேட்' ஊழல் வழக்கில் கடந்த ஆண்டு ஜுலை மாதம் அந்த நாட்டின் உச்ச நீதிமன்றத்தால் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். இதனால் அவர் பிரதமர் பதவியையும் இழந்தார்.

அவர் மீதும், அவரது குடும்பத்தினர் மீதும் ஊழல் வழக்குகள் பதிவு செய்து விசாரணை நடத்தவும் உச்ச நீதிமன்றம் அப்போது உத்தரவிட்டது.

இங்கிலாந்து நாட்டில் லண்டன் நகரில் ஊழல் பணத்தில் சொகுசு வீடுகள் வாங்கினர் என நவாஸ் ஷெரீப் மீதும், அவரது குடும்பத்தினர் மீதும் தேசிய பொறுப்புடைமை நீதிமன்றத்தில் 'அவென்பீல்ட்' வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கில், நவாஸ் ஷெரீப், அவரது மகள் மரியம் நவாஸ், மருமகன் கேப்டன் சப்தார் ஆகியோர் குற்றவாளிகள் என அந்த நீதிமன்றம் முடிவு செய்தது. அதைத் தொடர்ந்து நவாஸ் ஷெரீப்புக்கு 10 ஆண்டு சிறைத்தண்டனையும், மரியம் நவாஸுக்கு 7 ஆண்டு சிறைத் தண்டனையும், கேப்டன் சப்தாருக்கு ஓர் ஆண்டும் சிறைத்தண்டனை விதித்து கடந்த சில தினங்களுக்கு முன் தீர்ப்பு வழங்கப்பட்டது.



இதற்கிடையே லண்டன் நகரில் புற்றுநோயால் அவதியுற்று வருகிற மனைவி குல்சூம் நவாஸை சந்திப்பதற்காக நவாஸ் ஷெரீப் மகள் மரியம் நவாசுடன் அங்கு சென்றார்.

அங்கு குல்சூம் நவாஸ் உடல் நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக உள்ளது. அவருக்கு தொடர்ந்து செயற்கை சுவாசம் அளிக்கப்படுகிறது. இந்த நிலையில் நவாஸ் ஷெரீப், மகள் மரியம் நவாஸுடன் மீண்டும் நாடு திரும்புகின்றனர் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதற்கிடையே லாகூர் அல்லது இஸ்லாமாபாத்தில் விமானத்தில் வந்து இறங்கியதும் நவாஸ் ஷெரீப்பையும், மகள் மரியம் நவாஸையும் கைது செய்ய தேசிய பொறுப்புடைமை முகமை நடவடிக்கை எடுத்து வருகிறது.

அவர்களை கைது செய்து ராவல்பிண்டி அடியலா சிறையில் அடைப்பதற்கு முடிவு செய்து, ஏற்பாடு ஆகி உள்ளது.

நவாஸ் ஷெரீப்பையும், மரியம் நவாஸையும் கைது செய்து சிறைக்கு அழைத்துச்செல்வதற்காக 2 ஹெலிகொப்டர்கள் ஒதுக்கப்பட்டு உள்ளன. அவற்றில் ஒன்று லாகூர் விமான நிலையத்திலும், மற்றொன்று இஸ்லாமாபாத் விமான நிலையத்திலும் நிறுத்தி வைக்கப்படும் எனத் தகவல்கள் கூறுகின்றன.

நவாஸ் ஷெரீப் பிரதமராக இருந்த போது எந்த ஹெலிகாப்டரை தனது பயணங்களின் போது பயன்படுத்தினாரோ அதே ஹெலியில் அவர் சிறைக்கு கொண்டு செல்லப்படுவார் எனத் தகவல்கள் கூறுகின்றன.

கேப்டன் சப்தார் ஏற்கனவே அடியலா சிறையில் அடைக்கப்பட்டு விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது..

லண்டனில் இருந்து நாடு திரும்புவதையொட்டி நவாஸ் ஷெரீப் அங்கு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர், குல்சூம் நவாஸுக்கு இன்னும் செயற்கை சுவாசம் தான் அளிக்கப்படுகிறது. அவரை நினைவு திரும்பிய நிலையில் பார்க்க விரும்புகிறேன். இப்போதைக்கு அவரை விட்டு விட்டு பாகிஸ்தான் திரும்புகிறேன் எனக் கூறினார்.

மேலும், நான் என் நாட்டுக்காக போராடுகிறேன். சிறையோ, தண்டனையோ என்னை தடுத்து நிறுத்தி விட முடியாது. பாகிஸ்தான் மிகப் பெரும் கஷ்டத்தில் உள்ளது. நான் என் நாட்டை காக்கவே அங்கு செல்கிறேன் எனக் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் இரசாயன ஆலை தீ விபத்தில் 19 பேர் சாவு







ஷங்காய், ஜுலை 14

சீனாவில் உள்ள இரசாயன ஆலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 19 பேர் பலியாகினர். மேலும் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சீனாவின் தென்மேற்கு பகுதியில் உள்ள சிச்சுவான் மாகாணத்தில் இரசாயன ஆலை ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை திடீரென ஆலையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. வேகமாக ஆலையில் பரவிய தீயால் எங்கும் புகைமூட்டம் காணப்பட்டது.

இதனிடையே ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 19 பேர் உயிரிழந்தனர். மேலும் 12 பேர் படுகாயம் அடைந்தனர்.

கடந்த 2015 ஆம் ஆண்டு சீனாவின் டியாஜின் மாகாணத்தில் ஆலை ஒன்றில் ஏற்பட்ட விபத்தில் 165 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

சீன அரசு தொழில்துறை பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக (குறிப்பாக நிலக்கரி சுரங்கங்கள் மற்றும் இரசாயன ஆலைகள்) பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில் இந்த விபத்து நடந்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

(க)

# அருங்காட்சியகமாகும் தாம் லுவாங் குகை!



சிறுவர்கள் சிக்கித் தவித்த தாம் லுவாங் குகை அருங்காட்சியகமாகவும், மீட்பு குழுவின் தைரியமான மீட்பு பணிகளை சம்பவங்களாகக் கொண்டு திரைப்படமாகவும் தயாரிக்க நிறுவனமொன்று தயாராகியுள்ளது.

தாய்லாந்தின் சியாங் ராய் பகுதியில் உள்ள தாம் லுவாங் குகையை பார்வையிடச் சென்ற 12 சிறுவர்கள் மற்றும் அவர்களின் கால்பந்து பயிற்சியாளர் கடந்த மாதம் 23 ஆம் திகதி குகைக்குள் சிக்கிக் கொண்டனர்.

17 நாள்களாக குகையில் சிக்கித் தவித்த கால்பந்து பயிற்சியாளர் மற்றும் சிறுவர்கள் 12 பேரும் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

இந்த நிலையில், உலகின் கவனத்தை ஈர்த்த தாம் லுவாங் குகை மக்கள் பார்வையிடும் வகையில் அருங்காட்சியகமாக மாற்றப்படவுள்ளதாக சிறுவர்களை மீட்ட மீட்புக் குழுவின் தலைவர் நரோங்சாக் ஒசோட்டனகோர்ன் தெரிவித்தார்.

மீட்புப் பணியின்போது பயன்படுத்தப்பட்ட பல நவீன கருவிகள், பிரத்தியேக ஆடைகள் போன்றவை அருங்காட்சியகத்தில் மக்களின் பார்வைக்காக வைக்கப்படவுள்ளன. தாம் லுவாங் குகை அருங்காட்சியகமாக மாறும் பட்சத்தில் தாய்லாந்து நாட்டின் சிறப்பு மிக்க இடங்களில் இதுவும் ஒன்றாக மாறும் என்பதில் சந்தேகம் இல்லை.

மேலும், சிறுவர்கள் குகையில் சிக்கிக்கொண்டது முதல் பத்திரமாக மீட்கப்பட்டமை வரையிலான திரில் தருணங்களைத் திரைப்படமாகஎடுக்க உள்ளதாக பியூர் ப்ளிக்ஸ் எனும் படத்தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

# நாடாளுமன்ற தேர்தலுக்கு தயாராகிறது பா.ஜ.க; ஐம்பதுக்கும் மேற்பட்ட பேரணிகளில் பிரதமர் மோடி



அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெறுவதற்கு பிரதமர் மோடி உள்ளிட்ட முக்கிய தலைவர்களுக்கு 50 க்கு மேற்பட்ட பேரணிகளில் பங்கேற்க உள்ளனர் என பா.ஜ.க. தெரிவித்துள்ளது.

இந்திய நாடாளுமன்றத்துக்கு அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்று மத்தியில் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதில் பா.ஜ.க. தீவிரமாக உள்ளது.

இதற்காக பா.ஜ.க. தேசியத் தலைவர் அமித்ஷா மாநிலம் வாரியாக சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். இதற்கிடையே பிரதமர் மோடியும் மக்களிடம் ஆதரவு திரட்ட சுற்றுப்பயணத்தை தொடங்க உள்ளார்.

இதுதொடர்பாக பா.ஜ.கவினர் கூறுகையில் –

அடுத்த ஆண்டு பெப்ரவரியில் பிரதமர் மோடி 50க்கு மேற்பட்ட பேரணிகளில் பங்கேற்க உள்ளார். சுமார் 100 மக்களவை தொகுதிகளும் இதில் அடங்கும். இரண்டு அல்லது மூன்று மக்களவை தொகுதிக்கு ஒரு பேரணி நடத்தப்படும் வகையில் திட்டமிடப் பட்டுள்ளது.

இதேபோல், பா.ஜ.க. தேசிய தலைவர் அமித்ஷா, உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் நிதின் கட்கரி உட்பட பலரும் 50இற்கு மேற்பட்ட பேரணிகளில் கலந்து கொள்ள உள்ளனர் என தெரிவித்தனர்.

இந்த சுற்றுப்பயணத்தின் போது பல்வேறு நலத்திட்டங்களையும் பிரதமர் மோடி தொடங்கி வைக்க உள்ளார். இந்த நிலையில் பிரதமர் மோடியின் சுற்றுப் பயணத்தை பரபரப்பாக பிரபலப்படுத்த பிரதமர் அலுவலகம் ஏற்பாடு செய்து வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிங்கப்பூரில் நீச்சல் குளத்தில் பெண்களிடம் சில்மிஷத்தில் ஈடுபட்ட இந்திய டாக்டர்!

சிங்கப்பூரில் நீச்சல் குளத்தில் குளித்துக் கொண்டிருந்த 4 பெண்களிடம் சில்மிஷத்தில் ஈடுபட்ட இந்திய டாக்டரை 2 வாரம் சிறையில் அடைக்க மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் ஜெகதீப் சிங் அரோரா (வயது 46). இவர் தனது பிறந்தநாளை கொண்டாடுவதற்காக, தன் மனைவி மற்றும் 11 வயதான மகளுடன் சிங்கப்பூருக்குச் சென்றார். பிரபல சுற்றுலா தலம் ஒன்றில் உள்ள ஹோட்டலில் குடும்பத்துடன் தங்கினார்.

அங்குள்ள நீச்சல் குளத்தில் குளித்துக் கொண்டிருந்த 4 பெண்களிடம் அவர் சில்மிஷத்தில் ஈடுபட்டார். இதுதொடர்பான புகாரின்பேரில், அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. அவரை 2 வாரம் சிறையில் அடைக்க சிங்கப்பூர் மாவட்ட நீதிபதி நா பெங் ஹாங் உத்தரவிட்டார்.

குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், அரோராவுக்கு 2 ஆண்டு சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது கசையடி அல்லது எல்லாம் சேர்த்து தண்டனை விதிக்க வாய்ப்புள்ளது. தான் பெரிய தவறு செய்து விட்டேன் என்று நீதிமன்றத்தில் அரோரா தெரிவித்துள்ளார்.

## பணக்கார பெண்கள் பட்டியல்: 2 இந்திய பெண்களுக்கு இடம்



அமெரிக்காவில் சுயமாக உருவாகி பணக்காரர்களாகிய பெண்களின் பட்டியலை போர்ப்ஸ் பத்திரிகை தயாரித்து வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 2 பெண்கள் இடம் பெற்று இருக்கிறார்கள்.

அமெரிக்காவில் இருந்து வெளிவருகிற 'போர்ப்ஸ்' பத்திரிகை, சர்வதேச அளவில் ஆய்வுகள் நடத்தி பணக்காரர்கள் பட்டியலை வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் 'போர்ப்ஸ்' வெளியிடுகிற பணக்காரர்கள் பட்டியல் உலக பிரசித்தி பெற்றது.

இப்போது 'போர்ப்ஸ்' பத்திரிகை, அமெரிக்காவில் சுயமாக உருவாகி பணக்காரர்களாகி இருக்கின்ற 60 பெண்களின் பட்டியலை தயாரித்து வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் இந்திய வம்சாவளியை சேர்ந்த 2 பெண்கள் இடம் பெற்று இருக்கிறார்கள். அவர்கள், ஜெயஸ்ரீ உல்லால், நீரஜா சேத்தி ஆவார்கள்.57 வயதான ஜெயஸ்ரீ உல்லால், லண்டனில் பிறந்து இந்தியாவில் வளர்ந்தவர். அரிஸ்டா நெட்வோர்க்ஸ் என்ற கம்ப்யூட்டர் நெட்வோர்க் நிறுவனத்தின் தலைவராக உள்ளார். இவருடைய நிறுவனம் கடந்த ஆண்டு 1.6 பில்லியன் டொலர் (சுமார் ரூ.10,880 கோடி) வருவாய் ஈட்டி இருக்கிறது.

63 வயதான நீரஜா சேத்தி, சின்டெல் என்ற தகவல் தொழில் நுட்ப ஆலோசனை நிறுவனத்தின் துணைத் தலைவர் ஆவார். இவர் கணவர் பரத் தேசாயுடன் இணைந்து இந்த நிறுவனத்தை தொடங்கி நடத்தி வருகிறார்.

கடந்த ஆண்டு இந்த நிறுவனம் 924 மில்லியன் டொலர் (சுமார் ரூ.6,283 கோடி) சம்பாதித்து இருக்கிறது.

போர்ப்ஸ்' பட்டியலில் ஜெயஸ்ரீ உல்லாலுக்கு 18 ஆவது இடமும், நீரஜா சேத்திக்கு 21 ஆவது இடமும் கிடைத்து உள்ளது.

## போலி வேஷம் போடுகிறார் கமலஹாசன்: தமிழிசை சவுந்தரராஜன் குற்றச்சாட்டு



மதுரை, ஜூலை 14

அமாவாசை நாளில் கொடியேற்றுகிறார். ஆனால் பகுத்தறிவு பேசி போலி வேஷம் போடுகிறார் கமலஹாசன் என்று தமிழிசை சவுந்தரராஜன் கூறியுள்ளார்.

பா.ஜனதா கட்சியின் தமிழக தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் நேற்று மதுரை விமான நிலையத்தில் அவர் நிருபர்களிடம் தெரிவிவிக்கையில் –

தமிழகத்திற்கு அகில இந்திய தலைவர் அமித்ஷா வந்து சென்றது பா.ஜனதா கட்சி நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் புதிய உற்சாகத்தை தந்துள்ளது.

தமிழகத்திற்கு மத்தியில் ஆளும் பா.ஜனதா கட்சி பல நல்ல திட்டங்களை தந்துள்ளது. தி.மு.க., காங்கிரஸ் ஆட்சி காலத்தில் கொண்டு வரப்படாத எத்தனையோ திட்டங்களை பிரதமர் மோடி நிறைவேற்றித் தந்திருக்கிறார்.

தமிழகத்தில் எந்த கட்சியுடன் கூட்டணி அமைக்க வேண்டும் என்று பா.ஜனதா கட்சி முடிவெடுக்கும். வருகிற செப்ரெம்பர், ஒக்டோபர் மாதங்களில் கூட்டணி தொடர்பாக முடிவு எடுக்கப்படும்.

பா.ஜனதா கட்சியுடன் கூட்டணி அமைக்க மாட்டோம் என்று தினகரன் போன்றவர்கள் கூறுகிறார்கள். இந்த கூட்டணியில் யார், யார் இருக்க வேண்டும் என்பதை பா.ஜனதா கட்சி தான் முடிவு செய்யும்.

அமாவாசை நாளில் கட்சியை ஆரம்பிக்கிறார். அமாவாசை நாளில் கொடியேற்றுகிறார். ஆனால் மய்யம் என்ற பெயரில் கட்சியையும் ஆரம்பித்து பகுத்தறிவு பேசுகிறார் கமலஹாசன். அப்படி பேசி போலி வேஷம் போடுவதை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

தமிழகத்தில் நீட் தேர்வில் நடைபெற்ற குளறுபடிக்கு காரணமான அதிகாரிகள் தண்டிக்கப்படவேண்டும். தமிழ் மொழியில் வினா மொழி பெயர்ப்பு சரியாக செய்யப்பட்டிருக்க வேண்டும். இதை சி.பி.எஸ்.இ. நிர்வாகம் கவனித்திருக்க வேண்டும்.

தமிழக அரசுடன் தாய், பிள்ளை உறவுடன் மத்திய அரசு செயல்பட்டு தமிழக வளர்ச்சிக்காக முன்னுரிமை அளித்து வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பத்துக்கும் மேற்பட்ட மாநிலங்களில் பெரு வெள்ளம்:

# தேசிய பேரிடர் மீட்பு படை வீரர்கள் உஷார் நிலையில்!

இந்தியா முழுவதும் வெள்ள நிலைமையை சமாளிப்பதற்காக 71 இடங்களில் 97 குழுக்களை தேசிய பேரிடர் மீட்பு படை பணி அமர்த்தி நடவடிக்கை எடுத்து உள்ளது.

மராட்டியம், கர்நாடகம், கேரளா, மத்திய பிரதேசம் உள்ளிட்ட 10 க்கும் மேற்பட்ட மாநிலங்களில் பருவ மழை கொட்டித் தீர்த்து வருகிறது. தொடர்ந்து பலத்த மழை பெய்து வருவதால் அந்த மாநிலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு உள்ளது. ஆறுகளில் வெள்ளம் கரை புரண்டோடுகிறது. பல இடங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை அடியோடு முடங்கிப் போய் உள்ளது.

இந்த நிலையில் வெள்ள நிவாரணப் பணிகளையும், மீட்பு பணிகளையும் கவனிப்பதற்காக தேசிய பேரிடர் மீட்பு படை (என்.டி.ஆர்.எவ்.), நாடு முழுவதும் 14 மாநிலங்களில் 71 இடங்களில் தனது 97 குழுக்களை பணி அமர்த்தியுள்ளது. ஒவ்வொரு குழுவிலும் தலா 45 வீரர்கள் இடம் பெற்று இருக்கிறார்கள்.

மேலும் இந்திய வானிலை ஆராய்ச்சித்துறை, மத்திய நீர் ஆணையம் உள்ளிட்ட பிற அமைப்புகளுடன்



தேசிய பேரிடர் மீட்பு படை தொடர்ந்து தொடர்பில் இருந்து வருகிறது. படைப்பிரிவின் கொமாண்டர்கள் மாநில அரசு அதிகாரிகளுடன் தொடர்பில் உள்ளனர். மழை, வெள்ளத்தால் எந்தவொரு பிரச்சினை ஏற்பட்டாலும் அதை சமாளிக்க ஏற்றவிதத்தில் தேசிய பேரிடர் மீட்பு படையினர் உத்திகளை வகுத்து செயல்படுத்த தயாராக உள்ளனர்.

இந்தியாவின் பல மாநிலங்களிலும் மழை, வெள்ள நிலவரத்தை டில்லியில் உள்ள தேசிய பேரிடர் மீட்பு படை கட்டுப்பாட்டு அறை 24 மணி நேரமும் தீவிரமாக கண்காணித்து வருகிறது.

பருவ மழை, வெள்ளம் காரணமாக பேரழிவின் தாக்கத்தை குறைக்கிற வகையில் தேசிய பேரிடர் மீட்பு படை செயல்படும். அதற்கு ஏற்ப மீட்பு மற்றும் நிவாரண குழுக்களை அமர்த்தி உள்ளது.

ஆபத்து ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ள இடங்களை, அங்கு உள்ள உள்ளூர் அதிகாரிகளுடன் கலந்தாலோசனை செய்து அடையாளம் கண்டு, தேசிய பேரிடர் மீட்பு படை உஷார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளது.

இதற்கிடையே மராட்டிய மாநிலத்தில் வெள்ளம் பாதித்த மாணிக்பூரில் இருந்து 68 பேரும், நலசோப்ரா மற்றும் பால்கரில் இருந்து 411 பேரும் தேசிய பேரிடர் மீட்பு படையினரால் மீட்கப்பட்டு உள்ளனர்.

இந்த தகவல்களை மத்திய உள்துறை அமைச்சக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## குற்றங்களைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் நியமித்தோம். இங்கு என்ன செய்கிறீர்கள்?"

– இவ்வாறு வடக்கு மாகாணத்துக்குச் சிறப்பாக நியமிக்கப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் மீது பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர சீறிப்பாய்ந்தார்.

செய்தியாளர்கள் முன்னிலையிலேயே பொலிஸ்மா அதிபர் இவ்வாறு நடந்துகொண்டார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள சட்டம், ஒழுங்கு அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் வடக்கு மாகாண முதலமைச்சரை நேற்றுப் பிற்பகல் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்போது முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் –

பொலிஸாருக்கும் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கும் நெருங்கிய உறவு இருப்பதால் வடக்கில் குற்றங்களை கட்டுப்படுத்த முடியாது உள்ளது என்று பொலிஸ்மா அதிபரிடம் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்திப்பு நிறைவடைந்து வெளியேறியபோதே சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் மீது பொலிஸ்மா அதிபர் மேற்படி கேள்வியை எழுப்பிச் சீற்றமடைந்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக வடமாகாண முதலமைச்சர் தெரிவித்தவை வருமாறு:-

பொலிஸாருக்கும் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கும் நெருங்கிய உறவு இருப்பதால் வடக்கில் குற்றங்களை கட்டுப்படுத்த முடியாது இருப்பதாக சுட்டிக்காட்டினேன்.

தெற்கில் குற்றங்கள் புரிந்த பொலிஸாரையே இங்கு அனுப்புவதுதான் இதற்குக் காரணமோ எனத் தெரியாது என்றும் குறிப்பிட்டேன்.

அதற்கு அவர் அவ்வாறு இல்லை என்று கூறினார். மேலும் பொலிஸார் 2வருடங்கள் ஓர் இடத்தில் பணியாற்ற வேண்டும் என்றும் அவ்வாறே அவர்கள் சிறப்பாகப் பணியாற்றுகின்றனர் என்றும் தெரிவித்தார்.

மேலும் பொலிஸாருக்கும் குற்றங்கள் புரிந்தவர்களுக்கும் இடையில் நெருங்கிய உறவு இருப்பதைக் கூறியபோது, அதனை அவர் ஏற்றுக் கொண்டார்.

அவ்வாறு தனக்கும் பலவிதமான முறைப்பாடுகள் கிடைத்திக்கின்றன என்னிடம் தெரிவித்தார்.

அத்துடன் குறிப்பிட்ட சிலர் தொடர்பில் உடனடியாகவே நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் இவற்றைவிட போதைப்பொருள் கடத்தல் காரர்களுக்கும் பொலிஸாருக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைக் கூறினேன். அதனையும் அவர் ஏற்றுக் கொண்டார். அவ்வாறுதனக்குமுறைப்பாடுகள்கிடைத்துள்ளனஎனவும் கிடைத்துள்ள சகலதையும் விசாரணை செய்கிறார் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை சட்டவிரோத மண் கடத்தல் தொடர்பிலும் எடுத்துக் கூறினேன். இதனையும் அவர் ஏற்றுக்கொண்டு இங்கு மட்டுமன்றி நாடு முழுவதும் இந்தப் பிரச்சினை இருப்பதாகவும் கட்டுப்படுத்தக்கூடிய அளவுக்கு அதனை கட்டுப்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் வடக்கில் இடம் பெற்றுவருகின்றபோக்குவரத்து நெருக்கடிகள் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடினோன். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருடன் இவ் விடயத்தைக் கலந்துரையாடுமாறு தெரிவித்தார்.

பொலிஸாருக்குப் போக்குவரத்துக்கு ஏற்ற மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்கள் போதாது உள்ளமை தொடர்பில் எடுத்துக்கூறினேன்.

பொலிஸாருக்கும் குற்றம் செய்வோருக்கும் இடையில் உள்ள தொடர்புகள் தொடர்பாக இயலுமான அளவு பெயர் விவரங்களை இரகசியமான முறையில் தனக்கு எழுதி அனுப்பினால் விரைவான நடவடிக்கை எடுப்பார் எனவும் பொலிஸ்மா அதிபர் வாக்குறுதி அளித்துள்ளார். – என்றார். (ஐ-7)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவுச் செயலாளர் விஜய் கோகெல், தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவினரை நேற்று கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின் போது கருத்து வெளியிட்ட இரா.சம்பந்தன், புதிய அரசியல் யாப்பு மாகாண சபை தேர்தல்களுக்கு முன்பதாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார். அதே வேளை நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றமையினால் இவ்வருட இறுதிக்குள் புதிய அரசியல் யாப்பு நிறைவேற்றப்படுவது மிக அவசியமானதாகும் எனவும் தெரிவித்தார்.

மேலும் இந்தசந்தர்ப்பத்தை உதாசீனம் செய்ய முடியாது என தெரிவித்த இரா.சம்பந்தன், பிரிக்கப்படாத, ஒன்றிணைந்த, பிரிக்க முடியாத இலங்கை நாட்டிற்குள்ளேயே நாம் தீர்வொன்றினை நாம் எதிர்பார்க்கிறோம் எனவும், நீண்ட கால தேசிய பிரச்சினைக்கு புதிய அரசியல் யாப்பினுடாகவே ஒரு தீர்வினைக் காண முடியும் என்பதையும் வலியுறுத்தினார். புதிய அரசியல் யாப்பு மக்கள் தமது நாளாந்த விடயங்கள் குறித்து தாமே நிர்ணயித்து முடிவெடுக்கும் வகையில் அமைவதன் அவசியத்தையும் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் உள்ளடங்கிய விடயங்கள் புதிய அரசியல் யாப்பில் இடம்பெறவேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்தினார் இரா.சம்பந்தன்.

இந்தியாவில் இருந்து மீள வரும் அகதிகள் தொடர்பில் கருத்து வெளியிட்ட இந்திய வெளியுறவு செயலாளர், இந்திய அரசாங்கம் இந்த அகதிகள் தொடர்பில் தங்களால் இயன்ற அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இரா. சம்பந்தனோடு தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் –

இந்திய வெளியுறவு செயலரோடு இலங்கைக்கான இந்திய தூதுவர் தரன்ஜித்சிங் சந்துவும் இந்திய தூதரகத்தின் பிரதானிகளும் இச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

## பதினாறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டனர் என்ற இரண்டு குற்றங்களுக்கு இந்திய மீனவர்கள் 16 பேருக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

இந்தச்சிறைத்தண்டனையை 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைப்பதாக உத்தரவிட்ட ஊர்காவற்றுறை நீதிவான் அந்தோனிப் பிள்ளை ஜுட்சன், 16 மீனவர்களும் இதே குற்றத்தை மீளவும் செய்தால் சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்றும் கோடிட்டுக்காட்டினார்.

அத்துடன் அவர்களின் படகுகளைப் பறிமுதல் செய்வதா அல்லது தண்டப் பணத்துடன் மீளக் கையளிப்பதா என்ற கட்டளையை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம்வரை ஒத்திவைத்து நீதிமன்று உத்தரவிட்டது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 12 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தொழிலில் பயன்படுத்திய இரண்டு படகுகளும் கடற்படையினரால் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவம் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து கடந்த 5ஆம் திகதி அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்றது.

அத்துடன், கடந்த 8ஆம் திகதி அதிகாலை நெடுந்தீவுக் கடற்பரப்பில் படகு ஒன்றில் தொழிலில் ஈடுபட்ட மேலும் 4 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 16 பேரும் யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். அத்துடன், படகுகள் மூன்றும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்திய மீனவர்கள் 16 பேரும் ஊர்காவற்றுறை நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜுட்சன் முன்னிலையில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளால் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை ஆராய்ந்த நீதிவான், இந்திய மீனவர்கள் 12 பேரையும் நேற்று முன்தினம் 12ஆம் திகதிவரையும் மேலும் 4 மீனவர்களை நேற்று 13ஆம் திகதிவரையும்விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் அந்தோனிப் பிள்ளை ஜுட்சன் முன்னிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

இந்திய மீனவர்களுக்கு எதிராகப் புதிய சட்டத்தின் கீழ் நீரியல் வளத் திணைக்கள பணிப்பாளர் அதிபதியின் சார்பில் யாழ்ப்பாண அதிகாரிகளால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி வெளிநாட்டு வள்ளங்களில் தொழிலில் ஈடுபட்டனர் மற்றும் இலங்கையில் தடை செய்யப்பட்ட இழுவைமடி மீன்பிடி முறைமையில் தொழிலில் ஈடுபட்டனர் என்று இரண்டு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்திய மீனவர்கள் 16 பேரும் குற்றங்களை ஏற்றுக் கொண்டனர்.

"16 குற்றவாளிக்களுக்கும் இரண்டு குற்றங்களுக்கும் தனித்தனியே ஓர் ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. ஒவ்வொருக்கும் விதிக்கப்பட்ட 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

"இதே குற்றச்செயலை 16 பேரும் மீளவும் செய்கின்ற போது, 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

16 குற்றவாளிகளையும் உடனடியாக நாடு கடத்த குடிவரவு, குடியகல்வுதிணைக்களத்துக்கு உத்தரவிடப்படுகிறது" – என்று நீதிவான் அந்தோனிப் பிள்ளை ஜுட்சன்தீர்ப்பளித்தார்.

மேலும் புதிய சட்டத்தின் கீழ் படகுகளுக்குஅவற்றின்உரிமையாளர்களுக்கு தண்டப் பணம் அறவிடுவதா? அல்லது அரசுடமையாக்குவதா? – என்ற கட்டளை ஓகஸ்ட் மாதம் வழங்கப்படும் என வழக்கை நீதிமன்றம் ஒத்திவைத்தது.

இந்திய மீனவர்கள் சார்பில் சட்டத்தரணிதிருமதிஜோய்மகிழ் மகாதேவா முன்னிலையானார். (ஐ-7)

## அமைச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட மாகாணத்தின் மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி, வர்த்தக வாணிபம், வீதிப் போக்குவரத்து மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சர் என்ற ரீதியில் அதற்குரிய கடிதத் தலைப்பில் இந்தக் கடிதத்தை அவர் அனுப்பி வைத்திருக்கின்றார்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் தமது வழக்கில் வழங்கியுள்ள இடைக்கால உத்தரவை அவர் இந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

"நீதிமன்ற உத்தரவுப்படி மேற்படி அமைச்சுகளுக்கான அமைச்சராக நான் தொடர்ந்தும் பதவி வகிக்கின்றேன்.

எனது அமைச்சுத் தொடர்பாக தங்களிடம் உள்ள ஆவணங்கள், பதிவுகளை என்னிடம் ஒப்படைக்கும்படி என்னுடைய முன்னைய கடிதத்தில் நான் கோரியிருந்தும் நீங்கள் அவற்றைக் கையளிக்கவில்லை.

அதன் மூலம், எனது அமைச்சுப் பதவியை நான் ஆற்ற முடியாமல் அதில் தலையிட்டு, தடுத்துள்ளமையுடன் நீதிமன்ற உத்தரவையும் நீங்கள் மீறியுள்ளீர்கள்.

இந்த விடயங்களை உடன் என்னிடம் கையளிக்கும்படி கோருகிறேன்.

எனது முன்னைய கடிதத்தில் சுட்டிக்காட்டிய படி, தங்களின் சட்டத்துக்கு முரணான இந்தச் செயற்பாடு குறித்து நீதிமன்றத்திடம் முறைப்பாடு செய்வேன்.

– இப்படி அந்தக் கடிதத்தில் டெனிஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்தக்கடிதத்தின்பிரதிவடக்கு மாகாண ஆளுநருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (உ)

## ரூ.ஆறரைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹெரோயின்போதைப்பொருள்களைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். தமக்குக் கிடைத்த தகவலை அடுத்து இவைகண்டெடுக்கப்பட்டன என சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் ஐந்தரைக் கிலோ நிறையுடைய 21 ஹெரோயின் பொதிகள் இவ்வாறு கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி சுமார் 6 கோடி 60 லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்து விநியோகத்திற்காக இவற்றைப் புதைத்து வைத்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சம்பூர் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

## லலித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணைக்கு வந்தபோதும், சிரேஷ்ட அரசசட்டவாதிமன்றில் முன்னிலையாகாத காரணத்தால், வழக்கு எதிர்வரும் ஒக்டோபர் 12ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ்ப்பாண நகரில் நடைபெறவிருந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில்ஈடுபட்டிருந்தலலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்காலில் வைத்துக் காணாமல் ஆக்கப்பட்டனர்.

இது தொடர்பாக அவர்களின் உறவினர்களால் ஆள்கொணர்வு மனு 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டுநீதிமன்றில்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணையின்போது, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்துயாழ்ப்பாணம் நீதிவான்நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார, குகன் முருகானந்தனின் மனைவி, லலித்குமார் வீரராஜின் தந்தையார் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

தொடர்ந்துமுன்னாள்அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல உள்ளிட்ட சிலர் சாட்சியமளித்தனர்.

அத்துடன், கடந்த தவணையின் போது, லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான முறைப்பாட்டை எடுத்த அச்சுவேலி பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சாட்சியமளித்தார்.

இந்தநிலையில்இந்தவழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

மனுதாரர்களின் சட்டத்தரணிகள் மன்றில் தோன்றினர். எதிர்மனுதாரரான யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணியும் மன்றில் முன்னிலையானார்.

லலித் வீரராஜின் அலைபேசி இணைப்பின் 2011ஆம் ஆண்டு டிசெம்பர் முதலாம் திகதி முதல் டிசெம்பர் 31ஆம் திகதிவரையான விவரங்களைச் சமர்பிக்குமாறு டயலொக் நிறுவனத்துக்கு நீதிமன்று உத்தரவிட்டிருந்தது. அதனைச் சமர்ப்பிக்க அந்த நிறுவனத்துக்கு நீதிமன்று அழைப்புக் கட்டளை வழங்கியிருந்தது.

அதனடிப்படையில் டயலொக் நிறுவன அதிகாரி ஒருவர் நேற்று நீதிமன்றில் தோற்றினார்.

எனினும் எதிர் மனுதாரர்களில் ஒருவரான சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையாகும் சிரேஷ்ட அரசசட்டவாதிமன்றில் முன்னிலையாகாத காரணத்தால்வழக்கைநடத்தமுடியாமல் போனது.

அதனால் வழக்கு விசாரணையை வரும் ஒக்டோபர் 12 ஆம் திகதிவரை ஒத்திவைத்து யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் உத்தரவிட்டார். (ஐ – 7)



# முதலாவது ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்தைச் சரித்தது இந்தியா

இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் ரோஹித் சர்மா மற்றும் விராட் கோஹ்லியின் அதிரடி ஆட்டத்தால் இந்தியா அபார வெற்றி பெற்றது.

இங்கிலாந்து – இந்தியா இடையிலான ரி20 கிரிக்கெட் தொடர் முடிவடைந்த நிலையில், மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரின் முதல் ஆட்டம் நொட்டிங்ஹாமில் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி தலைவர் விராட் கோஹ்லி பந்து வீச்சை தேர்வு செய்தார்.

இங்கிலாந்து அணியின் ஜேசன் ராய், பேர்ஸ்டோவ் ஆகியோர் ஆரம்ப வீரர்களாக களம் இறங்கினார்கள். ஜேசன் ராய் 38 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். குல்தீப் யாதவ் தொடர்ந்து ஜோ ரூட்டையும், பேர்ஸ்டோவையும் வீழ்த்தி னார்.

5ஆவது விக்கெட்டுக்கு பென் ஸ்டோக்ஸும் ஜோஸ் பட்லரும் ஜோடி சேர்ந்தனர். ஜோஸ் பட்லர் 53ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். பென் ஸ்டோக்ஸ் 102 பந்தில் அரைசதம் அடித்த கையோடு குல்தீப் யாதவ் பந்தில் வெளியேறினார்.

அதன்பின் வந்த மொயீன் அலி 23 பந்தில் 24 ஓட்டங்களும், அடில் ரஷித் 16 பந்தில் 22 ஓட்டங்களும் அடிக்க இங்கிலாந்து 49.5 ஓவரில் 268 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்தியா சார்பில் குல்தீப் யாதவ் 10 ஓவரில் 25 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக் கொடுத்து 6 விக்கெட்டுக்கள் சாய்த்தார். உமேஷ் யாதவ் 2 விக்கெட்டுக்களும், சாஹல் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 269 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி இந்தியா களமிறங்கியது.

ஆரம்ப ஆட்டக்காரர்களாக ரோஹித் சர்மாவும், ஷிகர் தவானும் ஆடினர். இருவரும் ஆரம்பம் முதலே அதிரடி ஆட்டத்தைத் தொடங்கினர்.

அணியின் எண்ணிக்கை 59 ஆக இருந்த போது ஷிகர் தவான் 40 ஓட்டங் களில் ஆட்டமிழந்தார். அடுத்து இறங்கிய விராட் கோஹ்லி ரோகித்துடன் இணைந்து அணியின் எண்ணிக்கையை உயர்த்தினார்.

ஒருபுறம் ரோஹித் சர்மா சதமடிக்க, மறுபுறம் விராட் கோஹ்லி அரை சதமடித்து அசத்தினார். இருவரும் இணைந்து 167 ஓட்டங்கள் ஜோடி சேர்ந்தனர். விராட் கோஹ்லி 75 ஓட்டங்களில் வெளியேறினார். அவரைத் தொடர்ந்து கே.எல். ராகுல் களமிறங்கினர். இருவரும் சேர்ந்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.

இறுதியில், இந்தியா 40.1 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 269 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ரோஹித் சர்மா 137 ஓட்டங்களுடனும், ராகுல் 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதையடுத்து, இந்தியா இந்தத் தொடரில் 1:0 என முன்னிலை வகிக்கிறது.

# டெஸ்ட் அணியில் இருப்பேன் – குல்தீப் யாதவ் தீவிர நம்பிக்கை



இந்திய டெஸ்ட் அணியில் இடம் பிடிப்பேன் என்ற நம்பிக்கை தனக்கு உள்ளதாக 6 விக்கெட்டுகளை வீழ்த்திய குல்தீப் யாதவ் கூறியுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒரு நாள் போட்டியில் சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் 6 விக்கெட் கைப்பற்றி அசத்தினார். இது அவரது சிறந்த பந்து வீச்சாகும். ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இடதுகை சுழற்பந்து வீச்சாளரின் சிறந்த பந்து வீச்சும் இதுவாகும். இந்திய பந்துவீச்சாளர்களில் சிறந்த பந்து வீச்சில் குல்தீப் யாதவ் 4ஆவது இடத்தை பிடித்தார். இந்த ஆட்டத்தில் ஆட்ட நாயகன் விருது பெற்ற குல்தீப் யாதவ் கூறியவை வருமாறு: –

நான் எனது பந்து வீச்சை சிறப்பான முறையில் தொடங்கினேன். அதிர்ஷ்ட வசமாக தொடக்கத்திலேயே சில விக்கெட்டுகளை கைப்பற்றினேன். என்னை பொறுத்தவரை எங்கு விளையாடுகிறேன் என்பது பற்றி கவலை இல்லை. ஆடுகளத்தில் பந்து சற்று திரும்புவதை உணர்ந்தேன். இதில் பந்தில் வேறுபாடுகளை காட்டினால் அது துடுப்பாட்டக்காரர்களுக்கு கடினமாக இருக்கும். டெஸ்ட் அணியில் இடம் பிடிப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. – இவ்வாறு அவர் கூறினார்.

## உலகக் கிண்ண உதைபந்தாட்டம்:

# மூன்றாம் இடத்துக்கான மோதல் இன்று இங்கிலாந்து - பெல்ஜியம் பலப் பரீட்சை


உலகக் கிண்ணக் உதைபந்து போட்டியில் இன்று நடக்கவுள்ள 3ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் பெல்ஜியம் – இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன.

21ஆவது உலகக் கிண்ணக் உதைபந்து போட்டி ரஷ்யாவில் நடைபெற்று வருகிறது. இந்த உதைபந்து திருவிழா முடிய இன்னும் 2 ஆட்டங்களே எஞ்சியுள்ளன. இறுதிப்போட்டி நாளை ஞாயிறு 15ஆம் திகதி நடக்கிறது. இதில் 1998ஆம் சாம்பியனான பிரான்ஸ் – குரோஷியா அணிகள் மோதுகின்றன.

அதற்கு முன்னதாக 3ஆவது இடத்துக்கான ஆட்டம் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் அரங்கத்தில் இந்திய நேரப்படி இன்று (14ஆம் திகதி) இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

இதில் பெல்ஜியம் – இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன. எந்த அணி 3ஆவது இடத்தை வெல்லப் போகிறது?

பெல்ஜியம் – இங்கிலாந்து அணிகள் இந்த உலகக் கிண்ணத்தில் மோதுவது இது 2ஆவது முறையாகும். ‘லீக்’ ஆட்டத்தில் பெல்ஜியம் 1:0 என்ற கோல் கணக்கில் வென்று இருந்தது. 16 ஆண்டுகளுக்கு





பிறகு ஒரே அணிகள் மீண்டும் அதே போட்டியில் 2 ஆவது முறையாக மோதுகின்றன. 2002இல் பிரேசில் – துருக்கி அணிகள் இரு தடவைகள் மோதின.

இந்தப்போட்டி தொடரில் சிறப்பாக விளையாடிய பெல்ஜியம் அதிர்ஷ்டம் இல்லாமல் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும் வாய்ப்பை இழந்தது. அரை இறுதியில் 0:1 என்ற கணக்கில் பிரான்ஸிடம் அது தோற்றது.

பெல்ஜியம் அணி 1986இல் 4ஆவது இடத்தை பிடித்தே சிறந்த நிலையாக இருக்கிறது. தற்போது அதில் இருந்து முன்னேற்றம் காண இங்கிலாந்தை வீழ்த்தி 3ஆவது இடத்தைப் பிடிக்கும் ஆர்வத்துடன் உள்ளது.

பெல்ஜியம் அணியில் ஈடன் ஹசாட், லுகாகு, டுபுருயன், பெலானி போன்ற முன்னணி வீரர்கள் உள்ளனர்.

1966ஆம் ஆண்டு சாம்பியான இங்கிலாந்து அணி இதற்கு முன்பு 1990இல் 3ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் இத்தாலியிடம் தோற்று இருந்தது. தற்போது அதே மாதிரி நடந்துவிடாமல் இருக்க வெற்றி பெற போராடும். இங்கிலாந்து அணியில் ஹாரிகேன், லிங்கார்ட், ஸ்டெர்லிங் போன்ற முன்னணி வீரர்கள் உள்ளனர்.

இரு அணிகளும் 21 முறை மோதி யுள்ளன. இதில் இங்கிலாந்து 15இல், பெல்ஜியம் ஒரு தடவையும் வெற்றி பெற்றுள்ளன. 5 ஆட்டங்கள் சமநிலையில் முடிந்தன.

இங்கிலாந்து அணி அரை இறுதியில் குரோஷியாவிடம் தோற்று இறுதிப்போட்டி வாய்ப்பை இழந்தது.

# இலங்கையின் இனவழிப்புப் போக்கு: பிரிட்டிஷ் எம்.பிக்கு நேற்று விளக்கம்

## நாடு கடந்த தமிழீழ அரசின் ஏற்பாட்டாளர்களினால்



இலங்கையில் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பிற்கு எதிராக இலங்கையைச் சர்வதேச நீதிமன்றுக்குப் பரிந்துரை செய்யக்கோரி நேற்று வெள்ளிக்கிழமை இங்கிலாந்து Southend West பகுதி நாடாளுமன்ற உறுப்பினர் David Amess அவர்களுடன் நாடுகடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் விளையாட்டு மற்றும் சமூகநலன் பிரதியமைச்சர் சொக்கலிங்கம் யோகலிங்கத்தின் நெறிப்படுத்தலுடன் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஊடக செயற்பாட்டாளரான சொர்ணலிங்கம் யதுர்சனின் ஒருங்கிணைப்பில் உறுப்பினர்களான நுஜிதன் இராசேந்திரம், பொன்ராசா புவலோயன் ஆகியோர் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

southend leigh-on-sea பகுதியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் காலை 10.00 அளவில் ஆரம்பித்த இச்சந்திப்பில் முக்கியமாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலினால் இலங்கை தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட 30/1, 34/1 போன்ற தீர்மானங்களில் உள்ளவற்றை எந்தளவிற்கு இலங்கை நிறைவேற்றியுள்ளது என்பது பற்றி ஆராயப்பட்டதுடன் அது தொடர்பான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது.

அத்துடன் தாயகத்தில் நடைபெற்றுவரும் கட்டமைப்பிலான இனவழிப்பு,புதிதாக அமையவுள்ள அரசமைப்பின் குறைபாடுகள், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பணியிலுள்ள ஊடகவியலாளர்கள் எதிர்நோக்குகின்ற அச்சுறுத்தல்கள், அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்ற காணி அபகரிப்பு முயற்சி, காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினை, அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் இலங்கையின் மௌனப்போக்கு போன்றவை குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையை ஏன் சர்வதேச நீதிமன்றுக்குப் பரிந்துரை செய்யவேண்டும் என்பது பற்றிய அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது.

சந்திப்பின் இறுதியில், தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க பிரிட்டன் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி இவ்விடயம் பற்றிய கேள்விகளைத் தாம் முன்வைப்பார் என நாடாளுமன்ற உறுப்பினர் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


SB TRAVELS AND TOURS (PVT) LTD (நேரடி முகவர்)

தற்போது சென்னை மற்றும் மதுரை ஆகிய நாடுகளுக்கு சென்று வருவதற்கான விமானப் பயணச்சீட்டுக்களை 19,300/=, 22,800/= இருந்து எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விமானப் பயணச்சீட்டுக்களையும் மிகக் குறைந்த விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.
*இந்தியா மலேசியா, பாங்கொக், தாய்லாந்து மற்றும் டுபாய் விசாக்களும் செய்து தரப்படும்.*

தொடர்புகளுக்கு: 021 222 8555, 021 222 9555, 076 691 1080, 076 691 1082



வடக்கின் கல்வியில் அர்ப்பணிப்புடன் பணியாற்றும், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்களின் தாபன நிர்வாக அலுவலகக் குறைகளைக் களைந்து

கல்வியின் வினைத்திறனை மேம்படுத்தும்

மாபெரும் நடமாடும் சேவை

கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர்

கௌரவ கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்

அவர்களின் நேரடிநெறிப்படுத்தலின் கீழ், அவரது பங்கு பற்றுதலுடன் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் அனைவரினதும் பங்கேற்புடன்

- சுயவிபரக் கோவைகள் பூர்த்தி
- சம்பள உயர்வுகள்
- பதவி உயர்வுகள்
- விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய இலக்கம்
- ஆசிரியர் பதிவு இலக்கம்
- கற்கை விடுமுறைகள்
- சம்பளமற்ற விடுமுறைகள்
- வெளிநாட்டு விடுமுறைகள்
- பிரசவ விடுமுறைகள்
- பிரமாணக் குறிப்பின்படி உள்ளீர்ப்பும் நியமனமும்
- பொருத்தமான நேரசூசியின்மை
- ஏனைய நிர்வாகம், பாடசாலை சார்ந்த பிரச்சனைகள்
- ஆசிரியர் விடுதிகள்
- பாடசாலையின் அடிப்படைத் தேவைகள் தொடர்பானவை

போன்ற அனைத்துப் பிரச்சினைகளுக்கும் விரைந்து தீர்வு வழங்குவதற்காக 19.07.2018 தொடக்கம் 02.08.2018 வரை உங்கள் வலயங்களில் நடத்தப்படவுள்ளது.

உடன் தீர்வை வழங்குவதற்கு வசதிசெய்யும் நோக்கில் உங்களுக்கு இருக்கும் கல்வி மற்றும் நிர்வாகம் சார்ந்த பிரச்சினைகளை எழுதி, தபால் உறையின் இடதுபக்க மூலையில் 'கல்வியின் வினைத்திறனை மேம்படுத்தும் மாபெரும் நடமாடும் சேவை' எனக் குறிப்பிட்டு, 17.07.2018 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்**
கல்வி அமைச்சர், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.


# கட்டடக் கூலித் தொழிலாளி உயரத்தில் இருந்து வீழ்ந்து சாவு

## வவுனியா வெளிக்குளம் பகுதியில் பரிதாபம்



வவுனியா, ஜூலை 14

வவுனியா, வெளிக்குளம் பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றில் கட்டட வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கூலித் தொழிலாளி ஒருவர் வீழ்ந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

காலை முதல் வவுனியா வெளிக்குளம் பிள்ளையார் ஆலயத்தில் கட்டடப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கூலித் தொழிலாளி ஒருவர் உயரமான இடத்தில் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது பிற்பகல் 2 மணியளவில் எதிர்பாராமல் தவறி கீழே வீழ்ந்துள்ளார். இதனால் தலையில் பாரிய காயம் ஏற்பட்டு, சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

மாத்தளை பகுதியைச் சேர்ந்த சிவா என்று அழைக்கப்படும் 30 வயதுடைய - ஓமந்தை, விளக்குவைத்த குளம் பகுதியில் தற்போது வசித்து வருபவரே - இவ்வாறு உயிரிழந்தவராவார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிசார் மேற்கொண்டு வருகின்றார்கள். (உ-100)


இன்று முதல்

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

யாழ்முற்றம்



076 443 8620
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் சந்தை

திறப்பு விழா: 14-07-2018 காலை 11 மணிக்கு



வீட்டுத்தோட்ட மரக்கன்றுகள் · மூலிகை மரக்கன்றுகள் · மட்பாண்டம்
கைவினைப் பொருட்கள் · பாதணிகள் · உலர் உணவுப் பொருட்கள்
பனைசார் உற்பத்திப் பொருட்கள் · தும்பு உற்பத்திப் பொருட்கள்
இயற்கை விவசாய மரக்கறிகள் · இயற்கை விவசாய இடுபொருட்கள்
இரசாயணமற்ற ஆரோக்கிய பானங்கள் · சைவ, அசைவ கூழ்
ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்கள் · சித்திரங்கள்
பயிற்சி வகுப்புகள் (யோகா, பரதம், கராட்டி, பாரம்பரிய சமையல்....)

உள்ளூர் உற்பத்தி - கலாசாரம் - பாரம்பரியம்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.07.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.